[illegible]

V1. No. 3/ 2 Aug 1928.

JL
[illegible], N28K
N 28.1.31
189014.

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0

புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வரு ஆகஸ்டுமீ 2உ [No. 31.

OFFICE OF THE ... 20 NOV 1928 ... MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	601
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	603
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	606
4.	தமிழ்ப் பாடம்	609
5.	சிவகாமி சரித ஆராய்ச்சி N. துரைக்கண்ணன்	611
6.	அருந்தமிழும் ஆங்கிலமும் N. இராமசாமி பிள்ளை	613
7.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	615
8.	மதிப்புரை	617
9.	வர்த்தமானம்	619

கலா நிலயம்.

சொல்வோரிற் கேட்பவ ரருமை V.

மனிதரின் வெளி வாழ்க்கை விலங்கின் குறுகிய நோக்கத்தினின்று விலகாத தன்மையதாய்த் தோன்றிய போதிலும், அவர்களுடைய உள்ளத்தே பிரபஞ்சாகாரமாய் மலர்வதற்குரிய அரும்பொன்று பிறப்புடன் பற்றியிருக்கின்றதென்பது இரவீந்திரநாதரின் கொள்கையென, நாமிங்குக் கையாளும் அவர் கட்டுரையினின்று தெரிய வருகின்றது. நறவும் நன்மணமும் அரும்பிற் இல்லை. அவ்வரும்பு முதிர்ந்து மலராகி அலர்ந்த பின்னரே அதனின் பண்பும் பெருமையும் அழகும் பயனும் யாவுந் தோன்றுகின்றன. இவ் வளர்ச்சி இயற்கைக் கிணங்கி நிகழவேண்டியதே யன்றிச் செயற்கையால் துரிதப்படுத்தத் தக்கதன்று. வலிந்ததனை யலர்த்த முயன்றால் நலிந்து கெடும். மனதின் தன்மையும் அன்னதே. பருவம் வந்தெய்துமுன் அரும்பை அலர்த்தி மலர் கொள்ள அவாவுவான் அதனைத் தீயிலே வாட்டுவதை யொக்கும் அவசரத்தால் நம்மனதை உந்தி உந்தி உகைக்கின்ற செய்கையும். அவசரத்திற்குக் காரணம் தனக்கொன்று அவசியம் எனும் நினைவே யாகுமென்பதை முன்னரே காட்டி யிருக்கின்றோம். அவசரமொழிந்து உள்ளதே போதுமெனும் சாந்தியோடு தழுவி மனம் பயிலுமாயின் அதன் இயற்கையாய மேன்மை அழியாமல் நாளுக்குநாள் வளரும், முதிரும், தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்கும். உன்னளவு நீயே அயலுதவியின்றி உயர்ந்தவன் என்னும் நினைவை யகற்றி, நினக்கொன்று அவசியம் என்று போதிப்பவரெல்லாரும் அம்மனதை மலரவொட்டாமல் பொசுக்குகின்ற பாதகர்களே யன்றி வேறல்லர். அவசியம் என்ற நினைவு வந்தால் அதனை அவசரம் தொடர்வதும் திண்ணம். எனின், தன்னிலை தளராது மனது வளர்வதற்கு அவகாசமில்லை. மனதும் அதனுள் அரும்பிய ஆன்ம சக்தியும் அடியோடு அழிந்துவிடுகின்றது. ஆயின்,

> "ஏ, ஏ, அவசிய மவசிய மென்ற அவசா
> மூர்க்கா, சீ, சீ! மலரா மனதை நின்
> பரபரப்பினிற் பொசுக்குவ தேனோ!"

என்னும் வசைக்குத் தொழில் தன அரசாதாய பிரசாரகர் யாவரும் பாத்திராகின்றனர்.

ஆதலால், வெளிநின்று ஒன்றையும் உட்புகுத்த முயலாமல் மனதை உண்ணின்று வெளியெங்கும் வியாபித்து வளரும்படி விட்டுவிடுவதே முறை. இவ்வளர்ச்சி ஒருநாள் ஒருமாத ஒருவருடகாலத்தில் முதிர்வதன்று. அதற்குப் போதுமான அவகாசம் வேண்டும். பிரபஞ்சத்தளவு பரவுதற்கியன்ற ஆன்மசக்தி பிறந்தநாள் தொட்டு மனதில் பதுங்கிக் கிடக்கின்றது. அச்சக்திதான் குற்றமற நிறைகின்ற குணமுடைய சத்தியமாம். ஒவ்வொருவரும் இச்சத்தியத்தின் விதையைத் தம்பால் பெற்றிருக்கின்றனர் என்பதை ஒருநாள் ரூபித்தே தீர்வர். வேண்டியதெல்லாம் போதுமான அவகாசந்தான். வளர்வதற்கு வேண்டிய இவ்வவ

காசத்தையும் மற்றுள புறச் சாதனங்களையும் அளிக்காமல் "உன்னிடத்துள்ள சத்தியத்தை இன்றே காட்டுவாய்" என்று ஒருவனை வலிந்து தூண்டுவதால் ஏது பயன். "காட்டுவாயானால் உனக்கு உடனே இன்ன குறை தீரும், இன்ன இலாபங் கிடைக்கும். ஆதலால் நீ சத்தியத்தைக் கைக் கோள்வது அவசியம்" என்பதெல்லாம் மனதின்சக்தி இயற்கைமுறையில் முதிர்வதன்முன் அதனை வலிந்து சோதிப்பதன்றி வேறென். அவசியத்தை ஒட்டித் தொடர்கின்ற அவசரத்தால் இவ்வாறு சோதிக்கவேண்டி வருகின்றது. இச்சோதனைக்கு நிகரான நிலையையோ மனம் இன்னும் எய்திலது. பின் என் செய்யும் அப்பேதை மனம். தன்னாலியன்ற அளவு சத்தியத்தை ரூபிக்க முயல்கின்றது. காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம், என்னும் இவை யாவும் சத்தியத்திற்கு எதிரான விகாரங்களாதலால் இவைகள் இருக்கின்றவரையில் சத்தியம் ரூபிக்கப்பட்டதாகாது. ஆதலால் சத்தியத்தைக் கைக்கொண்டு சில சாதிக்க நினைப்பவர் இவ்விகாரங்களை மனதினின்று அகற்றிவிட முயல்கின்ற முயற்சி மிகப் பெரியது. முயற்சி முற்றுவாராயின் சத்தியச் சோதனையிலும் தேறினவராவர். முதிரா மனதுடையவராதலால் பிரயத்தனம் பெரியதாயினும் சோதித்த சத்தியம் சித்திப்பதற்கில்லை. ஆனால் பகுத்தறிவில்லாப் பொதுஜனங்கள், பிரயத்தனஞ் செய்பவர்களின் சில செயல்களைக் கண்ணுற்று அளவற்ற வியப்பெய்தி அங்காந்து நிற்கின்றனர். ஆனால் பிரயத்தனத்திற் கேற்ற பலம் பெறுவதற் குரிய முதிர்ச்சி யடைந்தில தாகையால் அவர் மனமே அம்முயற்சியில் முறிந்து போகின்றது. ஈதறியார் பொது ஜனங்கள். இக்கருத்துக்களை இரவீந்திரநாதர்,

> "பின்னாள் முதிர்ச்சி அடைவதற் கிருக்கின்ற மனதில் பதுங்கிக் கிடப்பதாய்க் குற்றமற நிறைவதற்கியன்ற சக்தியை ரூபிக்கப் போதுமான அவகாசம் வேண்டும். ஆனால் மகா குரூரமான அவசரம் ஒன்று வந்து மனதை வலித்து பரிகசிப்பதொரு விரைந்த வழியை மேற்கொள்ளவே, அம்மனமோ, பிரயத்தனத்தின் வைபவத்தை மக்களின் கும்பல் வியக்குமாறு விட்டுவிட்டுத் தானே மறைந்து போய் விடுகின்றது."

என்னும் வாக்கியத்துள் செறித்துள்ளார். பிறிதொரு இலாபப்பயனை இலக்ஷியமாகக் கொண்டு சத்தியத்தைத் துணைக்கழைக்கின்ற செய்தி இவ்வாறுதான் முடியும் என்பதை இக்கவிஞர் உருவகம் செய்கின்ற புலமையை என்னென்றுரைப்போம். உலகவாழ்க்கையில் அமர்ந்த மனிதனை ஒரு தேரில் இருப்பவனுக்கு நிகராகக் கொள்ளலாம். இவ்விரதத்தில் இருப்பதே தனக்குப் போதும்என நினைப்பானாயின் அல்லலில்லை. மெல்ல அவன் ஊர்ந்து ஏகும் நெறியில் இயற்கையாய் எய்துகின்ற தென்றலும் சோலையும் வளமமை காட்சிகளும் இவனுக்குரியனவாகி இன்பச்சாந்தி நுகர்கின்றான். இதற்குமாறாக, வேறொரு பொருளைப் பெறுவது தனக்கு அவசியமெனக்கருதி அப்பொருள் இருக்குமிடம் உகைப்பதற்கே இத்தேர் கருவியென்று கொள்வனாயின் யாது நிகழும். முதலில், தேரைத் தான் நடத்துவது போக ஆசையின் கையில் ஒப்புவித்துவிடுகின்றான். இவ்வாசையோ தேரை விரைந் தோட்டுகின்றது. வழியுந்தெரியவில்லை. ஓடுகின்றவேகத்தால் பலஇடையூறுகளும் நேர்கின்றன. தனக்கு முன் ஓடிய தேர்கள் வழியெங்கும் முறிந்து கிடப்பதைக் காண்கின்றான். தன் தேரும் தள்ளாடுகின்றது. இதற்குள் பொழுதும் சாய்ந்துவிடும்போல் தோன்றுகின்றது. வழிதவறிற்றென்றும், வேகம் போதாதென்றும் நைகின்றான். தனக்குமுன் திண்டாடிச் செல்லும் பிறர் தேர் தன்வழியை மறிக்கின்றனவென்றுவைகின்றான். அவைகளோடுமோதுகின்றான். இப்படிச் செல்லுங்காலையில் இவனது நிலையைக் கண்டு இரக்கம் கொண்ட துறவியின் தோற்றத்தன் ஒருவன் விடயம் யாதென வினவ இவன், "ஐய, எனக்கொரு குறையுளது. அது தீர யான் இன்ன பொருளை எய்தவேண்டும். இதுகாறும் சென்றவழியொன்றும் என்னை அப்பொருளின்பால் எய்துவிக்கவில்லை. ஆதலின், நினக்கொரு உபாயம் தெரியுமாயின் இயம்புதி" என வேண்டுகின்றான். இவ்வாறு இவனே வேண்டிக்கொண்டாலும் கொள்ளலாம், அல்லது அவனே இவனிலையுணர்ந்து உபாயம் கூற வந்தாலும் வரலாம். எவ்வாறாயினும் அவன், "நண்ப, நினக்கொரு குறையுளதென்பதும், அது பிறிதொரு பொருளால் தீருமென்பதும் உண்மையல்ல. நின்னளவு நீ குறைவற்றவன். குறையொன்றுளது என்று எண்ணுவாயாயின் அது எப்பொருளாலும் நிறைவெய்திடாது. ஆசைக்கு வயமாக்கிய நின் தேரை, ஆதலால் மீண்டும் நீ கைக்கொண்டு விடு" என ஓதுவானானால் மாத்திரம் உய்யும் வகை ஓதினவனாவான். அவ்வாறின்றி, "மைந்த, பாவம் நின் குறை பெரிது. நீ வேண்டும் பொருளும் நல்லதே. நினக்குரியதுமாகும். அதனைப் பிறர் அபகரித்துக் கொண்டனர். தேர் கொண்டு நீ அதைத் தேடுவதைப் பாராட்டுகின்றேன். அப்பொருளின்பால் நின் தேரைச் செலுத்துவதற்குப் பல நெறிகள் இருக்கின்றன. அவைகளைத் தனியாய்ப் பின்பற்றும் ஆற்றலோ உனக்கு இல்லை. ஆனால், உனக்குந் தெரியாமல் நின் தேரின் மூலையில் உட்கார்ந்திருக்கின்றதே அதற்குத் தான் சத்தியம் என்று பெயர். அதனைத் துணையாகப் பற்றிக்கொள். பற்றிய கை விடாது அச்சத்தியத்தை உடன்கொண்டு போவாயாயின் நின் குறைதீர நினைத்த பொருள் எய்துவாய்" என்பானாயின், கேட்கின்றவன் காதுதித்திக்கு மெனினும் அவனும் அவன் தேரும் யாவும் நற்கதி நாடாவென்பது நிச்சயம்.

ஏனெனில், இதன் மேல் நிகழக்கூடியது யாது? உடனே அச்சத்தியத்தின் பக்கம் திரும்பி, "ஏ, சத்தியமே, வந்தனம். அம்முனிவர் உரைக்கின்ற வரையில் நீயொருவன் இருக்கின்றாய் என்பது உணர்ந்திலேன். இனி, நீயே, எனதாசைப் பொருளை எய்துதற்கு ஏற்ற உதவியா யிருத்தல் வேண்டும்" என்று தொழுகின்றான். உடனிருந்ததெனினும் முதிராக்குழவியாம் இச்சத்தியத்தோடு அவன் பண்டே பழகியறியானாதலால் அது,

"யாவும் நீ, எங்கும் நீ. நீ இருக்க நினக்கு இல்லாததொன்றில்லை. உன்னையே விற்று நீ உலகத்தை வாங்க முயல்கின்றாய். நின் தேரின் வேகத்தை அடக்கிக் கொள்," என இன்னபல மழலையால் மிழற்றுவது அவனுக்கு விளங்குவதில்லை. அவாவிய பொருள் அகப்படுமிடத்திற்குப்போகும் வழியே அது புகல்கின்ற தென்றெண்ணி இரதத்தைச் செலுத்துகின்றான். நெறியும் நேரமும் நெடிது கடந்ததாகவாக அவனது பொறுமை பிதிர்ந்து போகின்றது. கருதிய பொருள் கண்ணுக்குத் தென்படுவதுபோல் தோன்றவே அவசரம் மிகுந்தவனாய்ச் சத்தியம் காட்டிவந்தது என அவன் மதித்திருந்த வழியையும் விட்டு மிக்க வேகமாய்த் தேரைக் குறுக்கே பாய்ச்சாமல் என் செய்வான் அவன். இந்த வேகத்திற்கும் சத்தியத்தின் சாந்தத்திற்கும் வெகு தூரம். இவனுடன் வர அதனால் இயலவில்லை. சத்தியத்தை விட்டுவிட்டு முன்போல் ஆசையுந் தானுமாகவே போகலா மென்றாலோ, "சத்தியத்தைவிட்டுப் பிரியாமலிருப்பாயானால்தான் நீ நாடிய பொருள் நழுவாமல் கை கூடும்" என்று துறவிக்கோலத்தோ டெதிர்ப்பட்டவர் கூறியுள்ளார். இதற்கு யாது செய்வது என்று திகைப்பவனுக்கு அவனை அறியாமலே ஒரு உபாயம் தென்படும். சத்தியத்தைத் தன் தேர்க்காலில் கட்டிவிட்டால் போதுமே. ஆயின் சத்தியத்தை விட்டுப் பிரியப்படாது என்னும் விதியும் பிறழவில்லை, தேரையும் தனதிஷ்டப்படி செலுத்தலாம்.

இவ்விதமாகத் துணைகொண்ட சத்தியம் பின்னே உருண்டு புரளப் பேராசை பிடித்து முன்னே உந்தத் தேரானது தலைகால் தெரியாத வேகத்துடன் குறுக்கு வழிகளில் புழுதிப்படலம் பொங்கக் கிளப்பி ஆரவாரஞ் செய்து விரைகின்றது. இதனைக் காண்கின்ற உலகத்தார், "என்னே இதன் வேகம்! என்னே இதன் ஆற்றல்!" எனப் புழுதியையும் பேரொலியையுமே வியந்து பிரமைகொள்கின்றனர். அவனும் தான் சத்திய விரதத்தினின்று வழுவாத கொள்கையன் என்று விளம்பிக்கொள்வானாகின்றான்.

சத்தியப் பதாகை தூக்கிச் சஞ்சரிப்பவர் சாதிப்பது இதுவே என்பதை இரவீந்திரநாதர்,

> "எங்கெங்கும் இந்தப் பேராசை அவசரம், சத்தியத்தைத் தன் தேர்க்காலில் கட்டிக் குறுக்கு வழியாகப் புழுதிப் பிரமையூடு இழுத்துக்கொண்டு போவதை நாம் காண்கிறோம்"

எனத் தெரிவிக்கின்றார். ஆதலால் இதனிலும் பயனில்லை. இப்படிப் பயனில்லாது போகுமென்று எவ்வளவுதான் எடுத்துக்காட்டிய போதிலும் சனங்களுக்கு விளங்குவதுமில்லை. அவர்களுக் கிருக்கின்ற பகுத்தறிவின் உதவி ஒன்றே இதனை ஓர்ந்து கொள்ளப் போதாது. பகுத்தறிவு சிதைந்து பின்படுமாறு இடைவிடாது அவசரம் புகுந்து தூண்டிக்கொண்டே யிருக்க அவர் மனம் ஒருநிலை நிற்பதெங்ஙனம். எனின் "உன் பெருமையை நீயே நம்புவதற்குக் கரியாய் விளங்கி, ஓம் என்ற சொல்லோடு ஒன்றாகிக் கலந்துவிட்ட சத்திய புருஷனின் உத்தம உறவு ஒன்றே இக்காலத்தை உய்விக்க வல்லதாகும்" என்பதோடு கவிவர இரவீந்திரநாதர் முன்பகுதியை முடிக்கின்றார்.

இனி மாறுட மனதின் அமைப்பை ஆராய்ந்து அது நிரம்புவ தெங்ஙனமென இவர் வகுப்பதை மறுவாரம் விளக்குவோம்.

காந்திமதி என்னும் காந்தாரநாட்டுக் கட்டழகி.

(586-வது பக்கத் தொடர்ச்சி)

28. தனக்கு விஞ்சியதோ தெய்வம்.

இன்னவாறு மாதவி இளவரசனுக்கு நாணற் குழல் வழியாய் அற்றம் நேர்ந்தபோதெல்லாம் அமுதளித்துவர இருதினங்கள் கழிந்தன. ஆயினும் நெடுங்காலம் இக்காவலை அப்பாதகர் அறியாது காத்தலருமை. சீக்கிரத்தில் வெளிச்சென்று அயலுதவி அழைத்து வந்தாலன்றிச் சித்ராங்கனைச் சிறைமீட்டல் எங்ஙனம். மாளிகைக்குப் புறத்தே போவதற்கோ கடைக்காப்பாளர் விட்டிலர். இருந்தநிலை இவ்வாறாக, மூன்றாம்நாள் கோமகற்குஅடிசில் விட்டுத் திரும்பிய மாதவியைக் காந்திமதி யழைத்து, "மங்காய், பால் கொணர்வாள் ஒருத்தி இம்மாளிகைக்குள் வந்து போவதைப் பார்த்திருக்கேன். அவளுக்கு மாத்திரம் இவ்வநுமதி இருத்தல் வேண்டும். இன்று மாலை அவள் உள்ளேகியதும், அவளது வேடத்தை நீ கொண்டு வெளிச்சென்று கஜேந்திரவிம்மனையடைந்து, இங்கு இளவரசன் ஆழ்ந்துள அனர்த்தத்தைத் தெரிவிப்பாய். அவ்வேந்தனே இதற்கு ஏற்ற துணையாவார்", என்றனள்.

"என்னைக் கொல்லுமாறு தனதாட்களை ஏவிய அக்கொடியோன்பால் எங்ஙனம் அடைவேனியான்!" என்றாள் மாதவி.

"நின்னையும் என்னையும் போன்றவர் அன்னார் வினையில் இமையளவு நிலைத்திரார். அவர் வாராவிடின் இம்மாளிகையில் அவர் கோமருகன் வதையுண்பான் என்பதைச் சொல். உடனே வந்து காப்பதுமல்லாமல் நின்னையும் அவர் வாழ்த்துவார்."

"காந்தி, யான் வாழ்வதைப் பின்னர்ப் பார்ப்போம்... இவ்விடம்விட்டுப் போவதிலும் இருப்பதே அதிகம் ஆபத்திற் கிடமானதால், நானிருக்க நீயே செல்."

"அற்றன்று. இளவரசற் குணவளிக்கும் புழை இருக்கின்ற இடத்தை எனக்குக்காட்டித்தந்து பிறகு, நீ செல்வதே தக்கது. பாண்மகள் நீயாதலால் எவ்விடமும் எளிதிற் செல்லலாம். யாவரும் சங்கைகொள்ளார். இன்றுமாலையில் பால்கொணரும் அப்பெண் வரும்நேரம் பார்த்திருப்போம்." என்று காந்திமதி கூறியதற்கு மாதவியும் ஒவ்வினள்.

பகற்பொழுது சிறிது சாய, வழக்கம்போல் பால்காரி மாடுகளை ஓட்டிக்கொண்டு உள்நுழைந்து தன்மேல் போர்த்தியிருந்த கம்பளியை ஒருமரத்தில் மாட்டிவிட்டு மாளிகையின் பின்புறஞ்சென்றாள். இதனைத் தனதறைப் பலகணியால் பார்த்திருந்த மாதவி விரைந்தெழுந்து

காந்தியைத்தழுவி, இளவரசனுக்கு உணவளிக்கும் வழியும் வேளையும் யாவும் செப்பி அகல்கையில் காந்திமதி, "நங்காய், நின்செலவு செவ்விதாக. நீ வருவதற்குள் யானிங்கு மாள்வேனாயின், கலாநாதரை ஒருநாள் கண்டு, 'மருந்தே இறந்ததென்று' என்வாய்ச் சொல்லாக அவருக்குச்சொல்லி, அவரெனக்கு அன்றணிந்த இவ்விரலாழியை என் நினைவுகூறிக் கொடுத்திடு. பிறரது இரத்தத்தைச் சிந்தவேண்டா என்று யான் அவரை இரந்ததெல்லாம், எனது இரத்தத்தை நான் பெரிதும் போற்றியிருந்ததாலன்றென்பதை அவ்வீரர் அறியட்டும்," என்று தன்கைநின்ற மோதிரத்தைக் கழற்றித் தனதிரு கண்களிலும் ஒற்றிக்கொண்டபின் கொடுத்தாள். அதனை மாதவிபெற்றுத் தன் நாய் பைரவனைக் கூவ அது அங்கு இல்லாமைகண்டு,"காந்தி, இச்செய்கையில் உயிர் துறப்பது யானெனின்,எனதரும் சுணங்கன் பைரவனை நீ பரிவினோடு வளர்த்துவர வேண்டுகின்றேன்''என்றோதிப் பால்கொணர்ந்த பெண் கழற்றிவைத்த கம்பளியை எடுத்துப் போர்த்திக்கொண்டு புறப்பட்டாள். மதிளின் வாயிலை விரைவிற் கடந்தகலுமவளைக் காவற்காரன், "என்ன பெண்ணே, இன்றைக்கு இவ்வளவு விரைவாக வந்ததும் திரும்புகின்றாய்" என்று கேட்டான். மாதவியும் முகத்தைத் திருப்பாது, "இல்லையப்பா, கால்கயிற்றை மறந்துவிட்டேன். மடி சுரப்பதற்குள் அதனைக் கொண்டுவந்து விடவேண்டும்," என்று சொல்லியவண்ணமாய் நடந்துவிட்டாள்.

வெளிவந்த மாதவி இருள் சூழுமுன் இரத்தினபுரி எய்தும் நோக்கத்தினளாய்,எவரையேனும் எதிரிற் கண்டால் நடப்பதும் காணாக்கால் ஓடுவதுமாய் விரைந்து காலைந்து கல் தூரம் செல்லாமுன் பெரியதோர் போர் முழக்கம் அவள் செவிக்கு எட்டியது. என்னிதற்குச் செய்வதெனத் திகைத்தாள். இதற்கிடையில் யுத்தத்தில் பிளிறிய சங்கொன்று மணிவாளனதென்றுணரச் சிறிது மனந்தேறி அம்முகமே நோக்கிச் செல்வாளாயினாள். இவ்வாறு சென்றவள் போர்க்களத்தருகு நெருங்கியதும் மணிவாளனது பதாகையும் இவள் கண்ணிற்குத் தென்பட்டது. பின்னும் வேகமாய் விரைந்தோடினாள். ஓடினவள், கஜேந்திரவிம்மனும் மணிவாளனும் புரிந்திருந்த கடும்போர் நிலையைக்கண்டு அவர்க்கிடை அணுகி, "ஐயன்மீர், இச்செருவினைச் சற்றே நிறுத்துமின், ஐயகோ! யார்பொருட்டு இகல்கொண்டு பொருகின்றீரோ அவர் நமனூர்க் கிரையாகுந்தருணத்தி லிருக்கின்றார். அவர் உய்யக்காண விரும்புவீரேல் இருவோரும் ஏகுமின் என்னுடன்"எனக் கதறினாள்.

களத்திடை இப்பெண்ணின் குரல் கேட்டுக் கைதளர்ந்த மணிவாளன், தன்கைச் சிறிய வாளிற் கிரையாகா வண்ணம் காஷ்மீரத்தரசன் தடுத்தது காணத் தீயெழச் சிவக்கும் கஜேந்திரவிம்மனின் கண்களுக் கெதிரில் மாதவி வந்து நின்று, மணிவாளனையும் கடைக்கண்ணால் பார்த்தவளாய், "மன்னா, நின்மருகன் அங்கு மாள்கின்றான். நீவிரோ இங்கு மாள்வதற்கு முயல்கின்றீர். மற்று, யார் காப்பர் கோமகனை!" என்றுகூற, அவ்விருவரும் ஒருவாயராய், "எங்கு எங்கு?" என்று வினவினர். பாண்மகளும் பால்மகளுமாய் நின்ற அப்பெண் சித்ரமோகன மாளிகையில் நிகழ்வதை இரண்டொரு சொற்களால் தெரியச் செப்பினாள். அதுகேட்ட கஜேந்திரவிம்மன் வெகுண்டு, "இளமகன் இவன் என்பாலன்பிலனாயினும் சாகக் காணேன்" எனத் தன்படை பின்தொடரக் குதிரையை உந்தினான். "எனதொரு மருகன் அவன் ஆகானெனினும் எனதரசனாவா னல்லனோ," வென்று தன்தானையோ டுடன் ஏகினான் மணிவாளன். "மணிவாள, நின் மருகனாக நானென்னை ஆக்கிக்கொண்டேன் என்றயிர்த்தினாய் ஆதலால்,என்னைச் சிறைகாக்கமறந்து நீயகன்றாலும் அவ்வற்றத்தையான்பயன்படுத்திக் கொண்டகலாமல் நின்னோடு வருகின்றேன்" என்று காஷ்மீரத்தரசனும் சேர்ந்துவர, ஆளற்றுத் திரிந்த குதிரையொன்றைப்பற்றி மாதவி அதன் மீதேறி இம்மன்னர் மூவரையுந் தொடர்ந்தனள்.

மாளிகைக்குப் பால்பசுக் கொணர்ந்த பெண் கருமமுற்றியபின் கம்பளியை வைத்த விடத்தில் காணாளாகி வருத்தமுற்றுக் கள்வனைக் கண்டு தன் பொருளைத் தருமாறு நரபாலனமர்த்திய அச்சிறு காப்புப்படைக்குத் தலைவனை வேண்டினள். அவன் இக்களவை ஆராய்வானாகி ஆட்களை வினவவும், அனைவரும் அங்குத்திரிந்த பாணச்சியல்லாது திருடுதற் கொத்தவர் வேறிலரென்று சங்கையுற்றுச் செப்பினர். பாண்மகளை மாளிகை முழுவதும் தேடியது பயனற்றுப் போயது. அதன்மேல் படைத்தலைவன் சென்று கடைவாயில் காப்போனை வினவினான். காவலாளனோ, சிறிது நேரத்திற்குமுன் சென்றது பால்பகரும் பெண்ணல்லளாயின் பேயாயிருத்தல் வேண்டுமென் றுரைப்பதல்லால் பிறிதொன்று மறிந்திலன். பாண்மகள் அவ்விடம் விட்டுக் கரந்தகன்றனள் என்பது தெளிவாகவே படைத்தலைவன் இதனை நரபாலனுக் குரைத்தான். குற்றமுள்ள நெஞ்சிற் பஞ்சுபட்டாலும் குறுகுறுக்கும். தாமோதரனை வரவழைத்து நரபாலன் "பரத்தைப் பாண்மகள் பறந்தோடி விட்டனள், என்செய்வது?" என்று உற்றதை யுரைக்க அவனும் திகைப்பெய்தி, "மற்றவளைத் தந்திரமாய்க் கேட்டால் தெரிய இயலும்" என, இருவரும் காந்திமதி இருந்தவிடம் வந்தடைந்தனர். வந்ததும், "காந்தி, நின் தோழிப்பெண் எங்குற்றாள், அறிதியோ?" என்று வினவினான் நரபாலன்.

"எனக்குத் தோழியென் றொருத்தியும் இங்கிருந்ததில்லை" என்று காந்திமதி அஞ்சிய நெஞ்சினளேனும் கலையாத குரலோடு கூறினாள்.

"மொழி மறித்து மயக்காதே, மங்காய். பாண்மகளைப் பற்றித்தான் கேட்கின்றேன்."

"ஆயின், நாடெங்கும் பாடித்திரியும் பாண்மகள் ஒருத்தி போனவிடம் எனக்கெப்படித் தெரியும். இத்தனைநாள் அவள் ஓரிடத்தில் இருந்ததே வியப்பாம்."

"மற்று, நீ புகல்வதற் கியைவது இவ்வளவேயோ!" என நரபாலன் வெகுண்டனன்.

"நான் சொல்லக் கூடியது, நரபாலபிரபு, இவ்வளவுதான். இளவரசரே வந்து கேட்டாலும் இதன்மேற் சொல்வதற்கில்லை" என்றனள் காந்திமதி.

இச்சமயம் படைத்தலைவன் ஓடிவந்து நரபாலனிடஞ் சில வார்த்தைகள் சொல்ல, நரபாலனும் வைத்தியனும் வந்தவனுடன் விரைந்தகன்றனர். காந்திமதி கலங்கிய உள்ளத்தளாய்ச் சிறிதுபோது தனதறையிற் றங்கிப் பின் சித்ராங்கனிற்கு உணவளிக்கும் வேளை வந்ததை நினைத்து மெள்ளமெள்ளத் தோட்டத்துள் புகுந்து உணவூற்றும் புழை இருந்த சூழலை நண்ணி "இளவரசே, இளவரசே" என இருமுறை அழைத்தும் மறுமொழி வாராததால் திகைப்படைந்து, "இதுவன்றோ இடம்; மற்றுத் தூங்குகின்றானோ மன்னனின் புதல்வன்," என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுமமயத்தில், "ஆம், ஆம், அணங்கே, தூங்கத்தான் தூங்குகின்றான். நீங்காத் தூக்கம் நிலைத்துவிட்டது" எனப் பகரும் குரலொன்று அவள்பின் கேட்டது. திரும்பிப் பார்க்க, நரபாலனை முன்னிற்கக் கண்டு காந்திமதி உடலம் பதறினாள்.

"பெண்ணே, இப்பொழுதல்லவோ தெரிகின்றதுண்மை. ஆறுநாட்களாகியும் உணவின்றி அவன் உயிர் வைத்திருந்தது நின்செயலோ! இனிப் பயனில்லை. நீ அளிக்கும் உணவிற்கு இளவரசன் அங்காந்து நிற்கா வண்ணம் காரியத்தை முடித்து மீள மகோதரனைப் பொதியறை அனுப்பிவிட்டே இங்குவந்தேன்," என்றுநரபாலன் இயம்பக் காந்திமதி, "ஐயகோ! என் செவியையும் நின்நாவையும் நம்பேன்—இப்படுகொலைக்கு நின்னுடைய தெய்வந்தான் இடங்கொடுக்குமோ!" வென்றரற்றினாள்.

"தனக்கு விஞ்சியது தெய்வம்......... காந்தி, என்பின் வா, உனக்குப் பொருந்தியன சிலசொல்கின்றேன். வா என்னுடன்—(காந்தி தயங்கக்கண்டு)இல்லையேல்,... மகோதரனுக்கும் வைத்தியனுக்கும் விடையளிப்பது எளிதாயின் இவ்விடமே இரு."

மகோதரனின் செயலும் குணமும் உருவமும் இன்னவகைத்தென்று கேள்விப்பட்டுள்ள காந்திமதி இனி மறுத்தலின்றியே நரபாலனைப் பின்தொடர்ந்தாள். நரபாலன் அவளை அழைத்துக்கொண்டு மதிலின் காவல் கோபுரத்தின்மீது போய்ச் சேர்ந்தான். புரிசையின் புறமெல்லாம் சைந்நியங்கள் சூழ்ந்துநின்று ஆரவாரஞ் செய்யவும், உட்புறமிருந்த சிறுபடைச் சேவகர் அங்குமிங்கும் திரிந்தலையவும், கோட்டையின் வாயில் இருப்புக் கதவால் மூடப்பட்டிருக்கவும் கண்ட காந்தி மருண்டு நோக்கினள்.

"காந்தி, என்னின் கொடியதோர் இரகசியமின்று உன் வயமா யிருக்கின்றது. இக்காலைத் தூற்றிடாது காக்க உனக்குத் திறனுண்டோ?" என்றான் நரபாலன்.

"ஐய, நின்பொருள் யாதென ஓர்கிலேன்!"

"காந்தி, சித்ராங்கனை இன்று பொன்றுமே னென்பதை நீ அறிவாய். ஆம், மகோதரன் இதற்குள் அவனுயிரைப் பிழிந்திருப்பான். ஏன்! மெய்நடுங்கி மாழ்குகின்றாய். யான் செய்த கொடுமைதான் உனக்குத் தெரிகின்றதேயன்றி என் பழிக்குக் காரணத்தை நீ உணர்வதெங்ஙனம்! பாரிதனைப், பாவாய். இக்கையும் குறையாயிற்று. அவனது சேவகத்தில் என் வலக்கையை இழந்தேன்—யோசிக்கு மளவில் நின்பொருட்டுத்தான்— அவனோ என்னை நிந்தித்துத் தள்ளினான். நீயுமே என்னைக் காட்டிக்கொடுப்பது நியாயமாகுமா? நினைத்துப் பார். என்பால் ஒரு சிறிது நீ இரக்கங் கொள்ளத்தகும்."

"யான் என்செய வல்லேன். கையை வளர்க்க இயலுமோ! மற்று நின் குற்றத்தைக் குறைக்கத்தான் என்னாலாகுமோ?"

"மோனமா யிருக்கவேனும் இயலுமன்றோ! இங்கு நீ கண்டதும் கேட்டதும் பிறரறிய ஓதாதொழிதல் வேண்டும். இதோ, கஜேந்திரவிம்மனின் வெம்படை—இதோ, மணிவாளனின் சேனை—என் குற்றத்தை ஆராயவந்து இக் கோட்டையை முற்றுகை போட்டிருக்கின்றனர். எனக் கெதிராகக் கரிகூற வல்லார்,நீயும் சித்ராங்கனுமே. சித்ராங்கன் பொதியறையில் புதைந்து கிடக்கின்றான். அந்தக் கிடங்கிற்குப் போகும்வழி அறிந்தவர் ஒருவருமிங்கில்லை. வந்தானே இளவரசன் நகரிற்கு மீண்டனன் என்று நான் நாப்பிளக்கச் சத்தியஞ் செய்துவிடுவேன். நடந்ததை அவர்க்கு நவில்வதில்லை என்று நீ நங்காய், வாக்களிப்பாயாயின் கோட்டையைத் திறந்து வந்தவர் வேந்தரை வரவேற்பேன். இல்லையெனில் இந்நீண்டுயர்ந்த கோபுரத்தினின்று நின்னை உந்தித் தள்ளுவேனாயின் பிறகு எனக்கெதிரே சான்று பகர்வாரிலர். உண்மை நசையுண்டோ உனக்கு, உயிரில் விருப்பமோ, உத்தரம் சொல்."

இந்தத்தருணத்தில் வைத்தியன் தாமோதரன் அங்கு வந்திரானாயின், பால் புளிப்பினும் பொய்யறியா இக் கட்டழகி வாய்மையே கடைபிடித்து மின்னல் கொடியென அம்மதில் பாய்ந்து உயிர்துறக்க நேர்ந்திடினும் நேர்ந்திருக்கலாம். பேய்க்குண வைத்தியன் நமன் கையில் தன்னுயிரை அடைக்கலம் செய்துவிட்டானேனும் சிறிதளவு வாட்டமும் முகத்திலிலனாய்ப் "பிரபு, தாங்கள், கட்டழகியின் கூட்டுறவை நயந்திருக்கும் இச் செவ்வியைச் சிதைக்க மனமில்லேன். எனினும், அற்ப விடயம் ஒன்று தங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டி யிருக்கின்றது. இச்சிறு இடைப்பிறவரலைப் பொறுத்தருள்வீர்" என்றனன்.

"நீமே தள்ளவும் தள்ளிவிட்டு உதைக்கவும் வந்தாயோ, கழுதை. நீ வேண்டுவது யாது?"

"ஹி! ஹி. ஹி! பெரியதோர் கருமமன்று. தேவரீர் தம் ஒற்றைக்கை ஒன்றினாலேயே இக் கோட்டையைக் காத்துவிட நினைவோ, என்றறிந்து போக வந்தனேன். இக்கேள்வியில் சிறிது சுவையும் இருக்கின்றது. ஏனெனில், மதிலைச் சூழ்ந்திருக்கின்ற பகைப்படைஞர் அனைவரும் என்கை மருந்துண்ண இணங்கினாலன்றி என்னால் பிறவழியிற் பயனேது. பொதியறை புக்க மகோதரனும் இதுகாறு மீண்டிலன்.நாம் மூவரும்அல்லாது சண்டைக்குச் சம்மதித்திருப்பவர் வேறு இலர்."

"என்ன! நமதாட்கள்?"

"படையெடோமென்று ஒரு மனப்பட்டுக் கூறுகின்றனர்."

இதற்கிடையில் உள்ளிருந்த படைத்தலைவன் அவ்விடம் வந்துசேர, "ஏனையா, குறித்தவிடம் விட்டகன்றனை" என நரபாலன் சினந்தனன்.

"எமதாயுதங்கள் உறையுள் புகுந்து கிடக்கின்றன. இவ்வமரி லெமக் கார்வமில்லை" என்றானவன்.

"என்மொழிக்கு முரணுமுறை எங்குக் கற்றனை? எனதேவலை ஆற்றுவான் அல்லனோ நீ."

"அரசனுக்கு அன்மியரா யிருப்பவர்களுக்கு நாங்கள் ஆட்களேயன்றி மன்னவரைப் போர்காண நாங்கள் மனங் கொள்ளோம். இளவரசன் வந்தெம்மைப் பணித்திடாததேன்? நோயின் மிகுதியால் நடக்க இயலாதெனின் அவ்விடம் யான் சென்று நேரே உண்மை தெரிந்து வரவேண்டும்."

"அடா, கயவா, இக் கைமாத்திரம் கத்தி பிடிக்கக் கூடியதாயிருந்தால், என்னை எள்ளிய நின் நாவைத் துள்ளக் காண்பேன்."

"அது, இருப்பதுபோல் இருக்கின்றது, நாமென்ன செய்யலாம். நரபாலரே, நும் கருத்தியாது? கோட்டையின் கதவைத் திறந்துவிட உத்தரவு கொடுக்கின்றீரோ, அல்லது நானே திறந்துவிடச் சொல்லட்டுமா?"

"வேண்டா, அடிமைப்பதரே, முடிவுவரையில் நானே உனக்குக் கட்டளையிடுவேன்.—கதவைத் திறந்து இக் கோட்டையைக் கஜேந்திரவிம்மனின் வயமாக்கடா," என்றனன் நரபாலன்.

படைத்தலைவன் அவ்விடம் விட்டகலாமல் தானதான் ஒருவனைக்கூவித் தோல்விக் கொடியைக் கோபுரத்தில் உயர்த்திக் கோட்டையையும் திறந்துவிடச் சொன்னான். வைத்தியன் காந்தியினருகே உற்று, "மகளே, நம் நரபாலப்பிரபு, தமது கருத்தின்படி காரியம் ஏவுகின்ற பெருமையைப் பார்த்தாயோ" என்று சிரித்தான். அவ்வுரைக்கு எதிர் உரைத்தலின்றியே காந்திமதி நரபாலனை நோக்கி, "ஏன்! இனி நான் போகலாமோ?" என்று கேட்டாள்.

"வேண்டா, இங்கிருந்து முடிவைப் பார்த்த பின்னரே நீ போகலாம்" என நரபாலன் இயம்பிப் பெருமூச்செறிந்தான்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[589-ம் பக்கத் தொடர்ச்சி.]

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை.

இனி, முன்னம் நாம் எடுத்துக்காட்டிய "அதுவே, தானே அவனே தமியர் காணக்—காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்" என்பதில் கண்ட "தமியர்" என்பதற்கு இருவரும் தன்னம் தனியாராகக் காணல் என்று ஒரு சாரார் பொருள் கூறுவர் என்று பிறர்மதம் மேற்கொண்டு களவாக எடுத்துக் காட்டியுள்ளார் நக்கீரனார். அத்தொடர்க்கு அப்பொருள் அவர் கொள்ளாவிடினும், அன்பு நிலையில் இருவரும் தன்னந்தனியேதான் கண்டு களிக்கவேண்டும் என்று அவரும் ஒப்புக்கொண்டனர். காதலன் காதலி கதை யல்லவா? தன்னந்தனியேதான் தழுவிக்கொள்ள வேண்டும். ஆனால் இறைவனோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையிலே தன்னந்தனியே இருப்பானேன். கடவுளிடத்தே கண்ணப்பர் ஓர் உயிர்ப்பாங்கனோடு போவதில் பழி ஒன்றும் இல்லை. களவொழுக்கத்திலுங்கூடப் பாங்கனோடு போதலும் தோழியோடு வருதலும் புகழப்படுகின்றன அல்லவா? மற்றொன்றும் உண்டு. கண்ணப்பர் கண்டதுதான் என்ன? கடவுளையா? அல்ல, கடவுளைக்காட்டும் ஓர் குறியினையே கண்டனர். அதுதான் கடவுள் என ஒருவர் சுட்டிக்காட்ட வேண்டுவது இன்றியமையாத தாயிற்று. கட்புலனாகக் கடவுளைக் காட்டும் சட்டகம் ஈதெனவும், அதனை வழிபடுமாறீதெனவும் ஒருவர் கற்பிக்கவேண்டாவா? ஆகவே அதற்கொரு நாணன் உடன் வரவேண்டிய தாயிற்று.

பாங்கனை அறிந்தோம். தோழி யாரெனக் காண்போம். பாங்கனோடுவந்த கண்ணப்பர் தலைவர் நிலையில் இருந்தால் கடவுள் தலைவி நிலையில் இருந்தார் எனக் கொள்ளலாம். ஆகவே தோழியைக் கடவுளினருகுதான் காணவேண்டும். அவ்வாறு அணுக்கத் தொண்டராய் விளங்குபவர் நமது கதையில் யார்? சிவகோசரியாரே அவ்வாறு திகழ்கின்றார். சிவபெருமானுக்குத் தோழி நிலையில் அப்பெரியாரைவைத்து நோக்கலாம். உயிர்த் தோழி தனது ஒருபெருந் தலைவிக்கு ஒப்பனைசெய்து விடுக்கக் காதலன் அதனைக்களைந்து வேறு ஒப்பனை செய்து அனுப்புவதனை அகப்பொருள் நூல்களிற் படிக்கின்றோம். அவ்வாறே இங்கும் சிவகோசரியார் செய்த ஒப்பனையைக்களைந்து புதிய ஒப்பனைசெய்து கண்ணப்பர் காண்பதும் நோக்கத் தக்கது.

ஆனால் கண்ணப்பரும் கடவுளும் பேச்சற்றுக் கலந்து நிற்கும் பெருநிலையைத் தன்னந்தனியே நின்ற தகுதி நிலைபோலவே சேக்கிழார் பெருமான் செவ்வனே புகழ்கின்றார். கண்ணப்புவதைப் பிறர் காணலாம், கரைந்துருகிக் கதறுவதையும் பிறர் காணலாம். தனிப்பெரு முதல்வனோடு தம்முணர்வற்று இருவரும் ஒருவராய் உவகைபூத்து ஒளிகனிந்து ததும்பும் உயிர்நிலையாகிய உயர்நிலையானது தன்னந்தனியாக நின்ற தனிப்பெரு நிலையே யாகும். அங்கே கண்ணெச்சில் பட இடம் இல்லை. கூட்டத்தின் அருமையால் இன்பம் பெருக வேண்டிக் குறிஞ்சித்திணையாகிய மலைநாட்டிலேயே இக்கூடல் ஒழுக்கம் நிகழவேண்டும் எனத் தமிழர் கொண்ட கொள்கையை முன்னரே குறித்துவைத்தோம். அதற்கு இணங்கக் கண்ணப்பரது ஒழுக்கமும் காளத்திமலையில் தான் நிகழ்கின்றது. இன்னும் இடையாமமே இவ்வொழுக்கத்திற்குச் சிறந்ததென்று, இவ்வன்பாராய்ந்தார் எழுதிவைத்ததையும் முன்னரே எடுத்துரைத்தோம. கண்ணப்பரோ தமது கடவுளை ஒருபொழுதன்றி அறுபொழுது அருகுநின்று வழிபட்டார். ஆனாலும் ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டு உலகைமறந்து உள்ளத்தையும் கடந்து உவகையே உருவாய் நின்ற ஒருபெரு நிலையானது இடையாமத்துத்தான் இனிதே நிலைபெற்று நின்றதாகச் சேக்கிழார் புனைந்துரைப்பார்.

அவ்வழி அந்தி மாலை
    அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி
    மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித்
    திருக்கையிற் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர்
    மருங்குநின் றகலா நின்றார்.
சார்வருந் தவங்கள் செய்து
    முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்தும்
    காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
    அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
    நீளிருள் நீங்க நின்றார்.

என்று புகழ்ந்தருளிய பொய்யாப் பெருநிலையில் இருவரும் இடையாமத்தே அம்மலையிடத்து தன்னந் தனியே நின்று இன்பந்துய்த்து இரண்டறக்கலந்து ஒன்றுதல் காண்க.

இனிக் காதலியும் காதலனும் ஒருவரை ஒருவர் கண்டதும் அவர்களிடத்து நிகழும் மெய்ப்பாட்டினையெல்லாம் அழகுபட விரித்துரைப்பார் தொல்காப்பியனார். அவ்விருபத்துநான்கு மெய்ப்பாடுகளையும் நந்நான்காக வகுத்து ஆறுவேறு நிலைகளாகப்பிரித்து ஒன்றின்பின் னொன்றாகத் தொடர்ந்து வருவதுபற்றி முதற்கூறு, இரண்டாங் கூறு, மூன்றாங் கூறு, நான்காங் கூறு, ஐந்தாங் கூறு, ஆறாங்கூறு எனப் பெயரிட்டு வழங்குவார். "புகுமுகம் புரிதல்" முதலாக எழுந்த ஆறு சூத்திரங்களிலும் அவற்றின் விரிவை அறிந்து அகமகிழ்க. அவை எல்லாம் காதலன் காதலி கதைக்கே உரியவை ஆதலினாலே அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டுவதில்லை. மேலே சென்று தொல்காப்பியனார் பொதுவாக வரும் மற்றைய மெய்ப்பாடுகளையும் விரித்துரைப்பார்.

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்டுயின் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்தமர் உவத்தல்
அறனளித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்
கலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.

இவற்றிலும் பல, காதலன் காதலியின் கதைக்கே சிறப்பாக உரியன. மற்றையன அன்புள்ள எல்லா இடங்களிலும் காணக் கூடியவையே யாகும்.

ஏதமாய்தலாவது கூட்டத்திற்கு வரும் இடையூறு உண்டென்று பலவும் ஆராய்தல். பிற விலங்குகள் வந்து பெருமானைப் பிடித்திழுத்துத் துன்புறுத்துமோ என்று கண்ணப்பனார் பெரிதும் வருந்துவது காண்க.

வெம்மறக் குலத்து வந்த
    வேட்டுவச் சாதியார் போற்
கைம்மலை கரடி வேங்கை
    அரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார்
    ஒருவரும் இன்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங்
    கிருப்பதே என்று நைந்தார்.

பசியட நிற்றலும் உண்டி சுருங்கலும் கண்ணப்பரிடத்துக் கண்டவையே. இறைச்சியைச் சுவைகாண வாயிலிட்டாரோ அது தவிர வேறோர் பருக்கையும் வாயிலிட்டார் அல்லர். இறைவனோடே எதிரும் விழியுமாய் நின்று இன்பம் துய்த்தாருக்குக் 'கனவொடு மயங்கல்' 'பொய்யாக் கோடல்' 'பசலை பாய்தல்' 'எதிர் பெய்தல்' பரிதல் முதலிய எல்லாம் ஏது? கண்துயில் மறுத்தல் என்பதோ கண்ணப்பரிடத்தே காணக் கிடைப்ப தொன்றாகப் புகழ்கின்றார் சேக்கிழார்.

இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனை செய்தந் நெறியில் ஒழுகுவார்
எப்பொழுதும் மேன்மேல்வந் தெழுமன்பாற் காளத்தி
அப்பரெதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை யாடுவார்.

கருமுகி லென்ன நின்ற
    கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாரும் காணில்
    வருமிர வொழிந்த காலை
அருமறை முனிவ னார்வந்
    தணைவதன் முன்பு போகித்
தருமுறை முன்பு போலத்
    தனிப்பெரு வேட்டை யாடி

என்றமையால் வேண்டிய மெய்ப்பாட்டினையும் சேக்கிழார் கூறினர் ஆயினர்.

இம் மெய்பாடுகள் வெளித்தோன்றும் பொழுது உள்ளிருக்கும் அன்பினைக் காட்டும் குறிகளாகின்றன. இவை ஒருபுறம் இருக்க நக்கீரனார் அன்பினைக் கண்டறியும் சிறந்த குறிகளாக நான்கினைக் கூறினார். அவைதாம் (1) புணர்ச்சி நனிவிரும்பல் (2) பிரிவுநனி இரங்கல் (3) நோவினோதல் (4) சாவிற் சாதல், என்பன என்று முன்னரே குறித்துள்ளோம். புணர்ச்சி மிகவிரும்பலாவது தான் விரும்பியவரோடு கூடி இருக்க மிகவும் அவாவுவது. கண்ணப்பர் எத்துணை பரபரப்போடு கடவுளிடம் ஓடோடியும் சென்றார் என்பதை முன்னரே எடுத்துக் காட்டினோம். இவருக்கு முன்னரே இவர் அன்பு சென்றது எனச் சிறப்பித்துக் கூறுவார் சேக்கிழார். இனிப் பிரிவுநனி இரங்கலாவது, பிரிந்திருக்க முடியாது மனம் மிகக் கலங்குவது. கண்ணப்பர் கடவுளைக் கண்டார். கட்டித் தழுவினார். பிரியமுடியாத அன்புபெருகி வளர்ந்தது.

அண்ணலைப் பிரியமாட்டா தளவிலாதரவு நீட, என்கின்றார் சேக்கிழார். பின்னும் "முன்புநின்று அரிதின் நீங்கி" என்பர். இறைவனோ பசித்திருக்கின்றான் என்று கண்ணப்பர் வருந்துகின்றார். பிரியவோ மனமில்லை. இறைச்சியும் எடுத்துவர வேண்டும் என்செய்வார். மனம் ஊசலாடுகின்றது.

இவர்தமைக் கண்டே னுக்குத்
    தனியராய் இருந்தார் என்னே
இவர்தமக் கமுது செய்ய
    இறைச்சியும் இடுவார் இல்லை
இவர்தமைப் பிரிய ஒண்ணா
    தென்செய்கேன் இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங்
    கெய்தவும் வேண்டும் என்று
போதுவர் மீண்டு செல்வர்
    புல்லுவர் மீளப் போவர்
காதலி னோக்கி நிற்பர்
    கன்றகல் புனிற்றாப் போல்வர்
நாதனே யமுது செய்ய
    நல்லமெல் விறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
    கொண்டிங்கு வருவே னென்பார்
ஆர்தம ராக நீரிங்
    கிருப்பதென் றகல மாட்டேன்
நீர்பசித் திருக்க இங்கு
    நிற்கவுங் கில்லேன் என்று
சோர்தரு கண்ணீர் வாரப்
    போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை எடுத்துக் கொண்டு
    மலர்க்கையால் தொழுது போந்தார்

இனி, இறைவன் சாதலோ என்றும் இல்லை. ஆதலின் சாவிற் சாதலைப் பற்றி இங்கு எண்ணவேண்டிய இடமே இல்லை. நோவினோதல்என்றால்என்னவென்று முன்னரே எழுதியுள்ளோம். அது தமிழர் ஆராய்ந்த அன்பின் உயர்வை உணர்த்துகின்றதென நாம் உணர்ந்தோம். அதனையும் அருமையான இத்திருக்கதையில் அறியலாகும்.

எங்ஙனம்? ஆறாவதுநாள் காலையிலே வேட்டையாடி நமது வேடர்பெருமான் திரும்பிவருகின்றார். அன்புநிலையில் உள்ளவர்கள் தமது அன்பர்களுக்கு வரும் தீங்கினை முன்னதாகவே ஊமையன் கண்டகனாப்போல ஏதோ ஒரு வழியால் அறிந்துகொள்வதைப் பற்றி முன்னரே குறித்துவைத் துள்ளோம். கண்ணப்பர் அந்த ஆறாம்நாள் திரும்பிவரும்போது பல காட்சிகளைக் காண்கின்றார். ஏதோ தீமை விளைவதாக அவை எல்லாம் அவரது மனக் கண்ணாடியிற் காட்டிவிடுகின்றன. இறைவனுக்கு என்ன நேர்ந்ததோ என்று குலைநடுங்கிக் குலைந்து போகின்றார். கடவுளுடைய கண்ணொன்றில் குருதிநீர் பீறிட்டுக்கொண்டு வருவது தூரத்தில் வரும்பொழுதே அவர் கண்ணுக்குப் புலனாகின்றது. ஒரே ஓட்டமாய் ஓடி வருகிறார். ஒன்றும் செய்ய இயலாது உணர்வழிந்து மயங்கி நிற்கின்றார். வாய் குளறவே மஞ்சனநீர் வாயினின்றும் கீழே வழிகின்றது. கைவில்லோ அவரையும் அறியாது கீழே விழுகிறது. நடுக்கத்தால் தலைமயிர் அவிழ்கின்றது. தலையிற் செருகிய பள்ளித்தாமம் எல்லாம் கீழே உதிர்ந்துபோகின்றன. பதை பதைத்து நிற்கின்றார். செட்டாங்கடையாய் விழுகின்றார்,

மாறிலா வமுது நல்ல
    மஞ்சனப் புனலுஞ் சென்னி
ஏறாண் மலரும் வெவ்வே
    றியல்பினி லமைத்துக் கொண்டு
தேறுவார்க் கமுத மான
    செல்வனார் திருக்கா ளத்தி
ஆறுசேர் சடையார் தம்மை
    யணுகவத் தணையா நின்றார்.
இத்தனை பொழுதும் தாழ்த்தேன்
    எனவிரைந் தேகு வார்முன்
மொய்த்தபல் சகுனம் எல்லாம்
    முறைமுறை தீங்கு செய்ய

இத்தகு தீய புட்கள்
    ஈண்டமுன் உதிரம் காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டேன்
    அடுத்ததென் றனையும் போதில்,
அண்ணலார் திருக்கா ளத்தி
    அடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத்
    திருநய னத்தி லொன்று
துண்ணென உதிரம் பாய
    இருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
    வல்விரைந் தோடி வந்தார்,
வந்தவர் குருதி கண்டார்
    மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையி லூனும்
    சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங்
    குஞ்சியின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கல் மார்பர்
    நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

பின்னர் எழுந்து போய்க் கண்ணைத் துடைக்கின்றார். ஆனால் குருதியோ நின்றபாடில்லை. "இனி இவ்வாறு செய்தார் யார்" என வில்லும் வாளும் தூக்கிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடுகின்றார். அறக்கருணை மறக்கருணை என்றும் அறக்கற்பு மறக்கற்பு என்றும் வழங்குவது போல அறஅன்பு மறஅன்பு என்றும் வழங்க இடம் உண்டு. கண்ணகி தன் காதலனாகிய கோவலன் கொலையுண்டான் என அறிந்தவுடன் உயிர்விடாது கொன்றாரைக் கொன்று பழிவாங்கப் புறப்பட்டு மதுரையை எரித்துப் போயினள். அதுபோலக் கண்ணப்பரும்,பழிக்குப்பழி வாங்க எண்ணிப் புறப்பட்டுப் போகின்றார்.

அறத்திற்கே அன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை

என்ற மறைமொழியின்உண்மை இங்கு விளங்குகின்றது.

விழுந்தவர் எழுந்து சென்று,
    துடைத்தனர் குருதி வீழ்வ
தொழிந்திடக் காணார் செய்வ
    தறிந்தில ருயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி
    யாரிது செய்தார் என்னா
எழுந்தனர் திசைகள் எங்கும்
    பார்த்தனர் எடுத்தார் வில்லும்,
வாளியும் தெரிந்து கொண்டிம்
    மலையிடை எனக்கு மாறா
மீளிவெம் மறவர் செய்தார்
    உளர்கொலோ விலங்கின் சாதி
ஆளிமுன் னாகி யுள்ள
    விளைத்தவோ அறியேன் என்று
நீளிரும் குன்றச் சாரல்
    நெடிதிடை நேடிச் சென்றார்.

ஆனால் அருகே வேடரையும் காணோம், விலங்குகளையும் காணோம். எவ்வளவு தொலைவுதூரம் சென்றாலும் ஒருவரும் கண்ணிற்படவில்லை. திரும்பிவந்து கடவுளின் காலில் வீழ்ந்து திருவடியைச் சேரக் கட்டிக்கொண்டு வாய்விட்டுக் கதறி அழுகின்றார். பின் ஒருவாறு தேறி எழுந்து தானறிந்த மருந்துகளைக் கொண்டுவரச் செல்கின்றார்.

வேடரைக் காணார் தீய
    விலங்குகள் மருங்கும் எங்கு
நாடியும் காணார் மீண்டும்
    நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு
    நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
    கதறினார் கண்ணீர் வார
பாவியேன் கண்ட வண்ணம்
    பரமனார்க் கடுத்த தென்னோ
ஆவியில் இனிய எங்கள்
    அத்தனார்க் கடுத்த தென்னோ
மேவினார் பிரிய மாட்டா
    விமலனார்க் கடுத்த தென்னோ
ஆவதொன் றறிகி லேன்யான்
    என்செய்கேன் என்று பின்னும்
என்செய்தால் தீரு மோதான்
    எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்
    மொய்கழல் வேட ரென்று
மின்செய்வார் பகழிப் புண்கள்
    தீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு
    வருவன்நான் என்று போனார்

அப்பொழுதும் என்ன பரபரப்பு. அந்த நிலையிலே ஓடும் கண்ணப்பருக்கு அழகியதோர் உவமை கூறுகின்றார் சேக்கிழார். காளைமாடு எத்துணைத் துவரோடும் ஓடும். அதுவும் தன்னினத்தைப் பிரிந்திருந்தால் இனத்தைப் போய்ச் சேர என்ன விரைவாகக் காற்றையும் அடித்துக் கொண்டு ஓடும். அதோடு அக்காளை சினங்கொண்டு ஓடுமானால் அதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா ? இன்னும் அது வெருட்சியால் வெருண்டு ஓடுமானால் கண்ணு முகம் தெரியாமல் எங்குப் போவதென்பதை அறியாது இங்கும் அங்கும் ஓடுமல்லவா? அஃதேபோலக் கண்ணப்பரும் அந்தப் புதரும் இந்தப் புதருமாக ஓடி மருந்து தேடுகிறார். அந்த மருந்துகளைக் கொண்டுவந்து கையாற் கசக்கிக் கல்லில் வைத்து இடித்து அரைத்துக் கடவுளது கண்ணில் பிழிந்து சாறு விடுகின்றார். ஒருசிறிதும் குருதி நின்றபாடில்லை.

"ஊனுக்கு ஊன்" என்று சொல்லிக்கொள்ளும் உலகவழக்கு அவரது நினைவிற்கு வந்தது,

நினைத்தனர் வேறு வேறு
    நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண்
    ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
    பூதகா யகன்பால் வைத்த
மனத்தினும் கடிது வந்து
    மருந்துகள் பிழிந்து வார்த்தார்.
மற்றவர் பிழிந்து வார்த்த
    மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர்
    குறைபடா திழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னோ
    இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக்
    கூனெனும் உரைமுன் கண்டார்.

நினைவிற்கு வந்ததோ இல்லையோ, அவரது கண் ஊறல் எடுத்தது. கண்ணை அகழ்ந்து எடுத்தால்தான் நிற்கும் போல் ஆயிற்று. அம்பினால் தமது கண்ணை அகழ்ந்தெடுத்துக் கடவுளது கண்ணில் அப்பினார்.

சிறிதேனும் முகங்கோணினாரா? அலறினாரா? இல்லவே இல்லை. இவை எல்லாம் செய்யும்பொழுது என்ன களிப்பு, என்ன களிப்பு. உடனே நிற்கின்றது குருதி. அவரது மகிழ்ச்சிக்கும் அளவு உண்டோ? வானிற் பாய்வதுபோல் ஒரே குதியாகக் குதிக்கின்றார். கையில் ஒருவரும் பிடியாதபடி கூத்தாடுகின்றார். தோளைத் தட்டுகின்றார். "நம்மறிவே தனிப்பெருந் தலையறிவு" என்று தமைத் தாமே புகழ்ந்து பாராட்டிக் கொள்கின்றார். கலகல என நகைக்கின்றார். பெரும் பித்தராய் நிற்கின்றார்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 31.

நள வெண்பா

(592-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

தங்கள் புலவித் தலையிற் றனித்திருந்த
மங்கை வதன மணியரங்கி—லங்கண்
வடிவாண்மேற் கால்வளைத்து வார்புருவ மென்னும்
கொடியாடக் கண்டானோர் கூத்து. 21.

பதப்பிரிவு:—தங்கள் புலவித்தலையில் தனித்து இருந்த மங்கை வதனம் அணி அரங்கில் அம் கண் வடி வாள்மேல் கால் வளைத்து வார் புருவம் என்னும் கொடி ஆட கண்டான் ஓர் கூத்து.

பதவுரை.

தங்கள் - தங்களுடைய
புலவித்தலையில் - ஊடலில்
தனித்து - தனியாக
இருந்த - போய் இருந்த
மங்கை - தமயந்தியின்
வதனம் - முகமாகிய
அணி - அழகிய
அரங்கில் - நடன மேடையின் மீது
அம் - அழகிய
கண் - கண்களாகிய
வடி - வடித்துக் கூர்மைசெய்த
வாள்மேல் - வாளின்மேல்
கால் - கால்களை
வளைத்து - வளைத்து
வார் - நீண்ட
புருவம் என்னும் - புருவமென்னும்
கொடி - கொடி போன்றவொரு பெண்
ஆட - நடிக்க
ஓர் - ஒரு
கூத்து - நடனத்தை
கண்டான் - (நளன்) கண்டான்.

விரிவுரை:—கோபம் வந்தவர்கள் தம் புருவத்தை நெறித்து ஏற்றுவதும் இறக்குவதும் இயல்பு. தமயந்தியின் புருவம் அவ்வாறு ஆடியதைக் கவி இச்செய்யுளில் வருணிக்கின்றார். வாள்களை வைத்துக்கொண்டு நடிக்கும் நங்கைக்கு மதங்கி என்று பெயர். தமயந்தியின் புருவம் இத்தகைய மதங்கியாக உருவகம் செய்யப்பட்டிருக்கின்றது. "வேல்படையும் வாளுமே கண்ணா" என்று முன் வந்திருக்கின்றபடி (129-வது பக்கம்), கண்ணைக் கூரிய வாளிற்கு நிகராகக் கூறுவது மரபு. கண்ணிற்கு மேலே புருவம் நிமிர்ந்தும் வளைந்தும் ஆடியதால், வாளின்மீது நடிக்கின்ற மாதங்கியாக அதனைக் கூறினார். இந்த நடனம் நிகழ்கின்ற இடம் தமயந்தியின் முகமாதலால் அம்முகம் நடனமேடை ஆயிற்று.

துடித்த புருவத்தளாய்க் கோபத்தோடு அகன்று நிற்கின்ற தமயந்தியை நளன் கண்டான், என்பது இச்செய்யுளின் கருத்து.

இவளுற்ற கோபத்திற்குக் காரணம் இல்லையென்று எடுத்துக் காட்டப் புகுந்திலன் நளன். மாதர்பால் அது பயன்படாது. "கன்னியர்தம் வேட்கையே போதும்" என்றது நாம் கொண்டபடி கவியின் கருத்தேயாயின், ஊடலுக்குக் காரணமும் இவன் உணர்ந்திரான். 'நாங்கள்' என்ற பன்மையால் அவள் ஊடினள் என்று ஒருவாறு இவன் ஊகித்திருக்கலாமாயினும், அதைப்பற்றி மேன்மேலும் பேசுவது பயனில்லாததோடு பொருத்தமுடையது மாகாது. ஆதலால், பிழையொன்றும் இழைத்திலனாயினும் 'பொறுத்தி' எனப் பணிவதே கடனென நினைத்தான். இலக்கியங்களில் ஆடவர் யாவரும் ஊடலைத் தீர்ப்பதற்கு இம்முறையையே கையாள்கின்றனர். பாவையர் கைநீண்டவும் பணிவர், நீண்டாது பிணங்கினாலும் பணிவர் புருடர். அவ்வாறு நளன் பணியத் தமயந்தியின் சினம் மாறுவதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினான்—வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீல மாறாச் சிவப்பு. 22.

பதப்பிரிவு:—சில் அரி கிண்கிணி மென் தெய்வ மலர் சிறு அடியை தொல்லை மணி முடிமேல் சூட்டினான் வல்லை முழு நீல கோதை முகத்தே மலர்ந்த செழு நீலம் மாறு சிவப்பு.

அன்வயம்:—சில் அரிக் கிண்கிணி மென் தெய்வ மலர்ச் சிறு அடியைத் தொல்லை மணிமுடிமேற் சூட்டினான். வல்லை, முழுநீலக் கோதைமுகத்தே, செழுநீலம் சிவப்புமாறு மலர்ந்த.

பதவுரை.

சில் - ஆரவாரம் செய்கின்ற
அரி - பருக்கைக் கற்களையுடைய
கிண்கிணி - சலங்கைகட்டிய
மென் - மிருதுவான
தெய்வமலர் - தாமரை மலர்போன்ற
சிறு - சிறிய
அடியை - (தமயந்தியின்) பாதத்தை
தொல்லை - தன் குலத்திலே தொன்றுதொட்டு வருகின்ற
மணி - அழகிய
முடிமேல் - கிரீடத்தின்மேல்
சூட்டினான் - (நளன்) அணிந்து கொண்டான்,
வல்லை - உடனே
முழு - முழுவதும்
நீலம் - கரியதான
கோதை - கூந்தலையுடைய தமயந்தியின்
முகத்தே - முகத்திலே
செழு - செழுமையான
நீலம் - நீலோத்பலம் போன்ற கண்கள்

சிவப்பு - (கோபத்தால் சிவந்த) சிவப்பானது
மாறு - மாறி
மலர்ந்த - மலர்ந்தன.

கருத்து:—நளன் தன்னைப் பணிந்தவுடன் தமயந்தி கோபம் மாறி அவனை இனிது நோக்கினள்.

விளக்கம்:—தமயந்தியின் ஒலிக்கின்ற பருக்கைக் கற்கள் செறிந்த சலங்கைகட்டிய மிருதுவான தாமரை மலர்போன்ற சிறிய அடியைத் தன் பழமையான அழகிய கிரீடத்தின்மேல் நளன் சூட்டிக் கொண்டதும் என்ன நிகழ்ந்தது? மலர்ந்த - மலர்ந்தன. எவைமலர்ந்தன? நீலம் - நீலோற்பலம் போன்ற கண்கள். எப்படிப்பட்ட நீலம் போன்ற கண்கள்? செழுநீலம் - செழித்த நீல மலர்போன்ற கண்கள். நீலம் என்ன செய்து மலர்ந்தன? மாறு மலர்ந்த - மாறி மலர்ந்தன. எதுமாறி மலர்ந்தன? சிவப்புமாறு - செந்நிறம் மாறி மலர்ந்தன. எங்கே மலர்ந்தன? முகத்தே - முகத்திலே. யார்முகத்தே? கோதை முகத்தே - கூந்தலையுடைய தமயந்தியின் முகத்திலே. எப்படிப்பட்ட கூந்தலையுடையவள்? நீலக் கோதை - கரிய கூந்தலையுடையவள். எத்தகைய கருமை? முழு நீலம் - முற்றிய கருமை.

விரிவுரை:—பாதத்தைத் தாமரை என்றதற் கேற்பச் சூட்டினன் என்றும், கண்ணை நீலோற்பலம் என்றதற் கேற்ப மலர்ந்தன வென்றும் புகழேந்தி முடிக்கின்ற நயம் கருதத்தக்கது. தங்குலத்திலே நெடுங்காலம் வழி வழி வந்த முடியை இன்று தமயந்தியின் பாதத்தில் வணக்கினன் என்று கவி விளையாட்டாகக் காட்டுகின்றார்.

குறிப்பு:—(1) மாறு, என்பது இங்கு உடன்பாட்டு வினையெச்சம். வினையெச்சத்திற்கு இவ்வுருவமும் இருப்பதை முன் (51-வது, 166-வது பக்கங்கள்) விளக்கியிருக்கின்றேன்.

(2) மலர்ந்த, சாதாரணமாக இது பெயரெச்சத்தின் உருவமாயிருந்தாலும் இங்கு வினைமுற்று. மலர்ந்தன என்று வழங்குவோம். உறுப்பிலக்கணம் இன்னும் சொல்லித் தரவில்லையாகையால் இது எப்படி வினைமுற்றாகும் என்றசந்தேகம் வரலாம். மலர்ந்தமலர்கள் என்றபோது பெயரெச்சம். மலர்கள் மலர்ந்த, என்று மாறினால் வினைமுற்று. குதிரைகள் புல் உண்ட, பறவைகள் ஒலித்தெழுந்த, என்னுமிடங்களில் உண்ட எழுந்த என்னும் சொற்கள் வினைமுற்றே.

(3) கோதை. என்பது கூந்தலைக் குறிக்காமல் அக்கூந்தலையுடைய பெண்ணிற்கு ஆனதால், ஆகுபெயர். எனின், என்ன ஆகுபெயர். கூந்தல் என்பது குணத்தின் பெயராய் அக்குணமுடைய பெயரை உணர்த்தவில்லையாதலால் குண ஆகு பெயரல்ல. ஊர்சிரிக்கும், என்பதுபோல் இடப் பெயர் அவ்விடத்திலுள்ளவர்களைக் குறிக்கவில்லையாதலால் இட ஆகு பெயரல்ல. 'கெண்டைக் கடை சிவப்ப' என்றதில் கெண்டை என்ற மீனின் பெயர் அம்மீன் போன்ற கண்ணை உணர்த்தியது போல், இங்குக் கூந்தல் என்பது உவமையால், கூந்தல் போன்ற பெண் என்று ஆகாததால் உவமையாகு பெயரல்ல. 'வாய்துடிப்ப' என்ற இடத்தில் வாய் என்ற முதல்பொருளின் பெயர் அதன் ஒரு பாகமான உதடுகளைக் குறித்ததுபோல், இங்குக் கூந்தல்,தன்னின் ஒரு பாகம் தமயந்தி என்று குறிக்கவில்லை. ஆதலால் முதலாகு பெயருமல்ல. மற்றிது அம்முதலாகு பெயரிற்கு ஒருவிதத்தில் எதிரான சினை ஆகுபெயர். சினை என்றால் உறுப்பு அல்லது அவயவம் என்பது அர்த்தம். வாய்துடித்தது, என்ற உதாரணத்தில், பல் நாக்கு உதடு எல்லாம் சேர்ந்த வொன்றிற்கே வாய் என்ற பெயராதவால், அவ்வாய் முழுதும் துடித்ததென்று எண்ணமல், அவ் வாயின் ஒரு உறுப்பாகிய உதடு என்னும் பொருளில் வாய் என்னும் சொல்லை ஆக்கிக் கொண்டோம். வாய், முதல்பொருள், உதடு அவ்வாயின் உறுப்பு. முதல் பொருளின் பெயர் உறுப்பைக் குறித்தபடியால் அது முதலாகு பெயராயிற்று. அவ்வாறே, 'மான் போன்ற அழகிய கண்ணினள்' என்னுங்கால், இவளுடையகண், மானைப்போல் கொம்புகளும் புள்ளித்தோலுமாய் இருந்ததென்று யாரும் நினைக்கமாட்டார். அங்கே, மான் என்ற முதற்பெயர் அதன் உறுப்பாகிய கண்ணையே குறிக்கின்றது. ஆதலால் அங்கு மான் என்றதும் முதலாகு பெயரே. இதற்குமாறாக, ஒரு உறுப்பின் பெயர் முழுவதாகிய முதற்பொருளைக் குறிக்குமானால் அப்பொழுது அது சினைஆகு பெயராகும். கூந்தல் என்றது ஓர் உறுப்பு. கோதை முகத்தே, என்றபோது கூந்தலுக்கல்ல முகம் இருப்பது. இங்குக் கூந்தல் எனும் சினைப் பெயர் அதை உடைய பெண்ணைக் குறித்ததால் சினை ஆகுபெயர். வெற்றிலை நட்டான், என்றால், நட்டது இலையை அல்ல. அவ்விலையை உறுப்பாகவுடைய செடியைக் குறிக்கின்றது. ஆதலால் இதுவும் சினையாகு பெயர். முதலாகு பெயரும் சினையாகு பெயரும் ஆங்கிலத்திலே அணியாகக் கருதப்பட்டு Synecdoche என்னும் அணியில் அடங்கும். மற்ற ஆகுபெயர்கள் பெரும்பான்மை Metonymy என்னும் ஆங்கில அணியுள் அடங்குகின்றன.

இனி, ஒன்றன் பெயர் மற்றொன்றிற்கு நேராக ஆகலாம், அல்லது அவ்வாறு ஆகிய ஆகுபெயர் இரண்டுதரம் மூன்றுதரம் மடிந்து பின்னும் மற்றொன்றின் பெயராக ஆகலாம். கெண்டைக்கடை சிவப்ப நின்றாள், என்னும் உதாரணத்தில் கெண்டை எனும் மீனின்பெயர் உவமை ஆகுபெயராகக் கண்ணை உணர்த்தியது. இந்தச் செய்யுளில் செழுநீலம் மலர்ந்தன, என்று வந்திருப்பதில் நீலம் என்னும் நிறத்தின் பெயர் பண்பாகுபெயராய் அந்நிறத்தை உடைய மலரைக்குறிக்க, மீண்டும் உவமையாகுபெயராய் அம்மலர்போன்ற கண்ணைக் குறிப்பதால், இது இருமடி ஆகுபெயர்.

(4) முழுநீலக் கோதை:—கூந்தல் கருநிறமாயிருக்க அதனை நீலம் என்றது ஆச்சரியமல்ல. தமிழ் இலக்கியங்களில் நீலம் பச்சை கருமை ஆகிய மூன்று நிறங்களையும் வேற்றுமையின்றி உபயோகிக்கின்றார்கள். திருமாலின் மேனியைப், "பச்சைமாமலைபோல் மேனி," என்றும், "நீலக்கிரிபோல் மேனி" யென்றும், "கார்வண்ணமேனி" என்றும் வருணிப்பதால் இவ்வேற்றுமையின்மை விளங்கும்.

அங்கைவேன் மன்ன னகல மெனுஞ்செறுவிற்
கொங்கையேர் பூட்டிக் குறவியர்நீ—ரங்கைடுத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப்பயிர் விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு. 23.

கருத்து:—ஊடல் தீர்ந்தபின் தமயந்தி நளனோடு கூடி இன்புற்றா ளென்பதை இச்செய்யுள் கூறுகின்றது.

வேரி மழைதுளிக்கு மேகக் கருங்கூந்தற்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான்—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை. 24.

கருத்து:—நளனுந் தமயந்தியுங் கங்கைக் கரையை அடைந்தனர்.

சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினான்
வையுற்ற வேற்றானை யன். 25

கருத்து:—அவர் அங்கு ஓர் செழித்து வளர்ந்த சோலையை எய்தினர்.

வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்-வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையா
னல்விளக்கே யெங்க ணகர். 26.

கருத்து:—மாவிந்தத்தை அடைந்து, இதுதான் தன் நகரமென்று நளன் தமயந்திக்குக் காட்டினன்.

பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறாத் திரிந்தாடித்—தையலுட
னீராண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ. 27.

கருத்து:—நகரை அடைந்தபின், நளனும் தமயந்தியும் பொழிலும் ஆறும் அருவியும் சேர்ந்து விளையாடிப் பன்னிரண்டு வருடகாலம் இன்பமாய் வாழ்ந்தனர்.

கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றாத நுண்மருங்கு றோன்றச் சுரிகுழலா
ளீன்றாள் குழவி யிரண்டு. 28.

பதப்பிரிவு:—கோலம் நிறம் விளர்ப்ப கொங்கை முகம் கருக நீல நிறம் மயிர்க்கால் நின்று எறிப்ப நூல் என்ன தோன்றாத நுண் மருங்குல் தோன்ற சுரி குழலாள் ஈன்றாள் குழவி இரண்டு.

அன்வயம்:—சுரிகுழலாள், கோலநிறம் விளர்ப்ப கொங்கை முகங்கருக,மயிர்க்கால்நின்று நீலநிறம் எறிப்ப, நூல் என்னத் தோன்றாத நுண்மருங்குல் தோன்ற இரண்டு குழவி ஈன்றாள்.

பதவுரை.

சுரி - சுருண்ட
குழலாள் - கூந்தலையுடைய தமயந்தி, (தன்)
கோலம் - அழகிய
நிறம் - மேனியானது
விளர்ப்ப - வெளுக்கவும்,
கொங்கை - முலைகளின்
முகம் - நுனியானது
கருக - கறுக்கவும்,
மயிர் - மயிரின்
கால்நின்று - அடியிலிருந்து
நீலம் - நீலமான
நிறம் - நிறம்
எறிப்ப - வீசவும்,
நூல்என்ன-பஞ்சு நூலைப்போன்ற (நுண்ணிதாய்)
தோன்றாத - தென்படாத
நுண் - மெல்லிய
மருங்குல் - இடுப்பு
தோன்ற - தோன்றவும் (கருப்பம் முதிர்ந்து)
இரண்டு - இரண்டு
குழவி - குழந்தைகளை
ஈன்றாள் - பெற்றாள்.

விரிவுரை:—விளர்ப்ப கருக எறிப்ப தோன்ற, என்னும் சொற்கள் காரியப்பொருளில் வந்த வினை யெச்சங்கள். இவைகளுக்குக் காரணமாகிய 'கருப்பந்தரித்தல்' செய்யுளில் கூறப்படவில்லை யாயினும் வருவித்துக் கொண்டோம். இவைகளெல்லாம் கருப்பமுற்ற மாதர்களின் மெய்யில் தோன்றும் வேறுபாடுகள்.

சிவகாமி சரித ஆராய்ச்சி.

189014
72211, N28
N28.1.3

சிவகாமி எனும் பெரிய இச்சரிதம் கோல்ட்ஸ்மித் (Goldsmith) என்னும் ஓர் ஆங்கிலப் பெரும் புலவரால் இயற்றப்பட்ட, விகார் ஆப் வேக் பீல்ட் (The Vicar of Wakefield) என்னும் நாவல் நூலில் வரும் ஒரு சிறு கதைப் பாட்டைத் தழுவித் தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கத்திற் கியையத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். இதன் மொழிபெயர்ப்பாசிரியர் ராவ்பகதூர் P. சுந்தரம்பிள்ளை M. A. F. M. U. F. R. H. S. M. R. A. S. அவர்கள் ஆவர். இதனை ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தாங்கள் யாத்த "மனோன்மணீயம்" என்னும் நாடக நூலின் ஊடே கவின்பெற அமைத்துள்ளார். மனோன்மணீயம் என்னும் நாடக நூலில் இச் சிவகாமி சரிதத்தைத் திகழச் செய்த இடத்தையும், பொருத்தத்தையும் கூர்ந்து நோக்கும் அறிஞர்கள் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களின் நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களினுஞ் சென்ற அறிவையும், அவ்வறிவைச் சமயம் நேர்ந்துழி உபயோகிக்கும் திறமையையும் போற்றி வியவாதிரார். அவ்வாறு இச் சிவகாமி சரிதத்தை அமைத்த இடத்தைச் சிறிது நோக்குவது நாம் கொண்ட ஆராய்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

மனோன்மணீயம் என்னும் நாடகத்தில் கதாநாயகியாகத் திகழும் மனோன்மணி என்னும் பெயரிய மங்கை, தான் கனவினிற்கண்ட சேரதேசத்தரசனான புருடோத்தமனிடம்கொண்ட அருக்காதலினால் காமசுரங்கொண்டு ஈவ்விரா முழுவதும் உறக்க மிலளாகி, "இதுவரை எங்கு இருந்தன இந்த அன்றிற் பேய்கள்! நஞ்சோ நா விடை? நெஞ்சம் துளைக்கும்!" என்று பலவாது பிதற்றி கையு முள்ளத்தளாய், சிறிது நேரமாயினும் அந்நினைவை ஒருவாறு மறக்க முயன்று நிலா முற்றத்துத் தன்னுடன் இருக்கும் தோழியாகிய வாணியை நோக்கிப் "பண்ணியல் வாணீ! வா வா! உன்றன் பாட்டது கேட்டுப் பல நாள் ஆயின! யாழுடன் தேக்கிய இசையிற் செப்பு ஒரு சரிதம்" என்று இசைக்கவும், அவளின்னுயிர்த் தோழியான வாணியானவள் வீணையை மீட்டி இச் சிவகாமி சரிதத்தைத் தேனினும் இனியவாய்ச் சேர்ந்து ஒரு வழி படர்ந்து ஊனையும் உயிரையும் உருக்கும்படி பாடுகின்றாள். இவ்விருவரின் மன நிலையைச் சிறிது நோக்குவோமானால் இச்சரிதையை இவ்விடத்தில் அமைத்த பெற்றி இனிது விளங்கும்.

இனி, இச்சரிதையைப் பாடச் செய்த கதா நாயகியாகிய மனோன்மணி பேதைப் பருவத்தினளாதலின் காதலின் தன்மை இன்னதென்றறியாளாய், நடராஜனென்பான் மெய்ம்மையான அன்பினால் பிணைத்த தளையை நீக்குதற்கியலாது கட்டுண்டுகிடக்கும் வாணி, "இறக்கினும் இசையேன், தாமேதுறக்கினும் மறப்பனோ என்னுளம் மன்னிய வொருவரை? ஆடவராக மற்றெவரையும் நாடுமோ நான் உளவளவும் என்னுளமே" என்று சொல்லக்கேட்டு, "வாணீ! பேய் கொண்டனையோ? பித்தேறினையோ? பேதாய்" என்று கூறியதோடமையாது, வாணி, "அறியாயொன்றும் அம்ம! அரிவையர் நிறையழிகாதல் நேருந்தன்மை ஒன்றுங்கருதியன்று அவருள்ளம் சென்றுபாய்ந்து சேருதல். திரியுங் காற்றும் பெட்புங்காரணம் இன்மையில் ஆற்றவும் ஒக்கும் என்றறைவர் மாற்றம் என்? நீயே மதி மனோன்மணியே!"

என்று மங்கையர் மனம் உண்மைக் குணமாய்க் காந்து நின்ற அன்பினில் தோய்ந்து அவ்வன்பு வெளிப்படுதற்குரிய எது வாய்த்தவளவானே அதனோடு இயைபுற்று மிளிரும் தகுதியை விளக்கிக் கூறவும், "புதுமை நீ புகன்றது. பூவைமார் காதல் இதுவேயாமெனில் இகழ்தற்பாற்றே! காதல் கொள்ளுதற்கு எதுவுமில்லையாம், தான் அறியாப் பேயாட்டத்தானும்" என்றும், "எண்ணுந்தோறுங் குதித்து கண்ணும் என்னுளம் மன்னிய தவத்தே" என்றும், "வேண்டுமேற் காண்டி! அவையெலாம் வீண்வீண், காதல் என்பது என்? பூதமோ? பேயோ? வெருட்டினால் நாய்போல் ஓடிடும். வெருவில் துரத்தும் குரைக்கும் தொடரும் வெகுதொலை" என்றும் இன்னோன்ன மாற்றம் கூறி எள்ளி நகையாடி வாணியை இழித்தாள். மேலும், மனோன்மணி, "வாணியே! பலதேவனுக்கே மாலைசூட்டிற் கேடென்? யாரேனும் ஓர் அழகும் பலமுமிக்க வாலிபனுக்கு மாலை சூடி மனமகிழ்வதை விட்டுக் காதலாம்! அன்பாம்! பித்தே பிதற்றினை!" என்று கூறித் தன் தோழியைத் தேற்றினாள்.

இவ்வாறு வீரமெல்லாங்கூறி வாணியைத் திருத்த முயன்ற மனோன்மணி "நூறுக்கேட்கினும் நூலறிவு என் செய்யும்? சின்னாள் செலுமுன் தேர்குவன், நீசொல் கட்டுரைத் திண்ணம். மட்டள வின்றிக் காதல் கதுவுங்காலை ஓதுவை நீயே வுறும் அதன் சுவையே" என்று வாணி சொல்லியாங்கு, துணைபுணர் அன்னத் தூவியணை மிசைக் கண்படுவாள் புருடோத்தமனென்னும் சேர அரசனைக் கனவிற் கண்டவுடனே, "நண்ப! என்னுயிர்நாத" என்று ஏங்கிப் புண்படுமவன்போற் புலம்புற்றுக் குழல் சரிந்து, மாலைகரிந்து, விழிபிறழ்ந்து, மொழிகுளறி, நெட்டுயிர்ப்பு எறிந்து, நயனநீர் மல்கி, சயனமேல் ஒல்கி, தன்னுருமாறி மேனியும் மண்ணாது, அமுதம் உண்ணாது, ஊசலும்கண்ணாது, பந்தும் எண்ணாது, குழலும்முடியாது, இசையும் படியாது, யாழும் தடவாது, பொழிலும் நடவாது மணியும் அணியாது, ஏவலும் பணியாது, கிளியும் மறந்து, அன்னமும் துறந்து, விழி நீர் பொழிந்து, மெய்விதிர்த்து அழுது, நெஞ்சில் நிறையழிந்து, நாணமும் நன்னலமும் உகுத்துக், "கண்டது, கனவெனில் கனவும் அன்று, மற்று நனவெனில் நனவும் அன்று" என்று நிலைகொள்ளாளாய்க் "கண்ணால் எங்ஙனம் காணுவன்? கண்ணுளார்! எண்ணவும் படாஅர்! எண்ணுளும் உளாஅர்! இதுவென வொண்ணு வுவமையி லொருவரை எத்திறம் என்றுயான் இயம்ப! நீயும் சித்திரரேகை யலையே, விடுவிடு!" என்று காதல் வெள்ளம் கதித்துப் பரந்துநீண்ட இருகரைபுரண்டு பெருமூச்சு எறியும் காலம் கன்னியர்க்கு உளதெனும் பெற்றி சாலவும் தெரிந்து வேம்பெனினும்கைக்கொள்ளும் பக்குவத்தை யடைந்திருந்தாள்.

இவள் இவ்வாறிருப்ப, வாணியென்பாள் உருவும், திருவும், அறிவும், குணமும், குடியும் எல்லாம் ஒருங் கெய்திய நடராஜ னென்னும் அழகிய வாலிபனிடம் ஆருக்காதல் கொண்டு பிற ஆடவரைக் கனவிலும் கருதாத கற்பின் நெறி கடைபிடித் திருந்தாள். அதோடு அவள் காதலின் பெற்றி இன்னதென நன்கு உணர்ந்தவளாயுமிருந்தாள். நடராஜனும் வாணியை உண்மை யன்புடன் நேசித்து வந்தான். இவ்வாறு இவர்கள் உளத்தோடு உளஞ்சென்று ஒன்றியவர்களாய் இருந்தனர். வாணியின் தந்தையும் தாயும் பேராசை யுடையவர்களாதலால் தம் பெண்ணை ஜீவகனின் மந்திரியாகிய குடிலனுடைய புத்திரன் பலதேவனுக்கு வதுவை செய்து வைக்க ஏற்பாடு செய்துகொண் டிருக்குமமையத்தில், ஒருதினம் அந்தியில் இவ்விருகாதலரும் கடிபுரி கடந்து போய் நெடுவயற் பாயும் ஒருசிறு வாய்க்காலருகில் அளவளாவிக் காதல்மொழி மொழிந்து மகிழ்ந்திருந்தனராக, நடராஜ னென்பான் முருகவிழ் குவளையொன்றை வாணியின் மொய்குழற் சூட்டத் தந்தான். அதை அன்பாய் மந்தகாசத்தோடு வாங்கியவாணி, இடையில் குறுக்கிட்ட குறும்புமதி தூண்ட, ஆர்வமும் அன்பும் அறியாதார்மான, மதியாதான்போல் ஆங்கு ஓடும் நீம் புனல்மாடே விடுத்துச் சிறுமியர் குறும்புகாட்டிச் சிரித்தாள். உடனே அவன் ஏது எண்ணுவானோ எனக் கலங்கி ஏதோ சொல்ல வாணி உன்னுமுன்னர், அவள் அன்னை ஆங்கு அடைந்து தீமொழி பலவுஞ் செப்பினாள். வாணி நா எழலின்றி அசைவற்றுப் பதுமைபோல நின்றாள். நடராஜன் மறுமொழி ஒன்றும் வழங்காது ஏகினான். அதுமுதல் நடராஜனை வாணி காணுதாளாய், அவன் பிரிவினை உன்னியுன்னி உள்ளம் மாழ்கினாள். "இனிமேற் காண்பனோ! ஒருமுறை கண்டு என்னுளக்கருத்து அவருடன் உரைத்தபோதன்றி யொழியாது உயிரே! யாரொடு நோவேன், யார்க்கு எடுத்துரைப்பேன்? வார்கடலுலகில் வாழ்கிலன். மாளுவன் திண்ணம். மாளுவன் வறிதே. நீறுகின்றதென் நெஞ்சம். நானோ என்னுயிர் தாங்குவ தெவ்விதம்? மன்னவன் கட்டளை மறுப்ப தெவ்விதமே? பல தேவனுக்கோ மாலைசூடும் இக்கரங்கள்! நேசமில் வதுவை நாசகாரணமே யன்றோ! நேயமும் ஆக்கப்படும் பொருள் ஆமோ? பெற்றோர் ஆற்றிய வழியே தையலார் மையலாய் நேயம் பூண்டு வாழ்வதற்கு? காதலின் நிலைமை இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி ஒன்றுந் தன்மையன்றி, ஒருவரால் ஆக்கப்படும் பொருள் ஆமோ? பலதேவனுக்கோ யான் உரியவளாவேன்! இதைவிடக் கன்னியா யிருத்தலே நலம்! சிறுகறையான் அரிக்கில் சந்தனம் விரை தருமோ? இறக்கினும் இறைவ! அதற்குயான் இசையேன்! அது கிடக்க, வதுவையும் வேண்டிலர். வாழ்க்கையும் வேண்டிலர்! ஒரு மொழி வேண்டினர் என்னின்னுயிர்த் தலைவர்! உரைத்திலேன் பாவி! நச்சினேன் எனு மொழிக்கே அவர்க்கிச்சை. பிச்சியான் ஓகோ! பேசினேன் இலையே! இனியென் செய்வேன்? என் நினைப்பாரோ? மனைவராவண்ணம் என் அன்னையும் உரைத்தாள். ஊர்வராவண்ணம் குடிலனும் ஓட்டினன். யார்பால் உரைப்பன்? யார் போய் உரைப்பர்? உயிரே எனக்கிங்கு ஒருதுணை" என்று இனைய நினைந்து நெஞ்சழிந்து நிறையழிந்து நாணழிந்து அழுத கண் அஞ்சனம் கரைந்து, கஞ்சனக் கதுப்பும் கறுத்துத் தன் கருத்தை முடிக்கக் கருணைக் கடவுளைப் பரவியவா ளிருந்தாள்.

இவ்வாறு இருமங்கையரில் ஒருத்தியாகிய மனோன்மணி, "தாயே! வந்துபார்! நீயே வளர்த்த முல்லையும் நறுமுகை முகிழ்த்தது. வல்லை. காதலிற் கவிழ்வை போலும்! போது நீத்து எம்மனை புகுந்த நல்திருவே!" என்று கூறும் செவிலியை நோக்கி, "போடி! நீ யாது புகன்றனை? தவத்தை நாடி நானிருக்க நணுகுமோ என்மனந் துச்சமாம் இச்சையாற் சோர்வு? நெருப்பையும் கறையான் அரிக்குமோ நேர்ந்தே!" என்று மனத் திட்பத்துடன் தவத்தை விழைந்தாள். காதலில் படுப்பாளாயின் காதலின் பெற்றிதான் என்னே! இவள் இப்போதே காதலின் பரிசினை அறிந்தவள். மற்றொருத்தியாய வாணியோ காதலின் பரிசினை முற்றும் இனைத்தென அறிந்தவள்! அக்காதலினால் விழுங்கப்பட்டு அதனுருவாய்த் திகழ்ந்தவள்! பழகியுள்ளவள்! திட்பம் பொருந்திய மனத்தினள்! காதலனின் அருளும் பெற்றவள்! காதலனின் பொருட்டு உயிரையும் விடத் துணிந்த

வள்! அவனை மணத்தலினின்றும் தவிர்ந்தால் கன்னியா யிருக்கவும் சம்மதித்தவள்! இந்நீர்மை வாய்ந்த இருவரின் உள்ளம் எதனை அவாவும்? அவர்கள் ஒன்றனைச் சொல்லவோ, கேட்கவோ விழைவது எப்பொருளைப் பற்றி என்று நினைப்போம். வேறுயாது! காதல் சம்பந்தமான வார்த்தைகளையும், காதலால் விழுங்கப்பட்டவருடைய நீர்மையும், அவ்வாறு ஒருவரையொருவர் உண்மையாய்நேசிக்குங்காலத்து இடையூறொன்று அவர்களைப் பிரிக்க, அப்பிரிவினால் அவர்கள் துயருறுவதும், இடையில் பஃறிறப்பட்ட இன்னல்களுற்றுப் பின் இருவருள் கூட்ட அணைந்து இன்புறுவதும் ஆகிய இந்நிகழ்ச்சிகளையன்றோ கேட்கவோ, சொல்லவோ விழையும்! அவ்விதம் சொல்லவோ, சொல்வதைக் கேட்கவோ விழைய அதற்கேற்ற தகுதி இருவரிடத்திலு மிருத்தல்வேண்டும். கேட்பவரைக் காட்டிலும் சொல்லுபவருக்கு மனத்திட்பமும், முதிர்ந்த அறிவும், காதலில் பழகிய உள்ளமும், உலக அனுபவமும், தான்சொல்லும் நிகழ்ச்சிகளெல்லாம் அனுபவித்தறிந்த அனுபவமும் இருத்தல்வேண்டும். கேட்பவர் அநேகமாகஐயஉளமுடையவமாயிருப்பர். இப்பெற்றி தெரிந்து ஆசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் மனத்திட்பமும், முதிர்ந்த அறிவும், காதலில் பழகிய உளமும், உலக அனுபவமும், தான்சொல்லும் நிகழ்ச்சிகளில் அநேகமாக அனுபவித்தறிந்தவளுமான வாணியின் வாயிலாய் இச்சிவகாமி சரிதத்தைச் சொல்ல வைக்கின்றார். கல்வி கேள்விகளால் முதிர்ந்த அறிவு நிரம்பப் பெற்றவளேயாயினும், உலகமே இன்னதென அறியாதவளாதலாலும், "காதல் என்பது என்? பூதமோ? பேயோ?" என்று கூறி நகையாடிக் களித் திறத்தினால் இஞ்ஞான்றே காதலின் தகுதியைச் சிறிது உணரப் பெற்றவளாதலாலும், மனோன்மணியைக் கேட்க வைத்தார். இவ்வித நுட்பந் தெரிந்து இச்சிவகாமி சரிதத்தை அமைத்த ஆசிரியரது பேரறிவு போற்றத் தக்கதேயன்றோ!

இனி நாம் இச்சிவகாமி சரிதத்தைக் கூறுமுகத்தான் அதிலுள்ள நயங்களையும், விழுப் பொருள்களையும் துருவி ஆராய்வாம். (தொடரும்)

N. துரைக்கண்ணன்.

அருந்தமிழும் ஆங்கிலமும்.

(597-வது பக்கத் தொடர்ச்சி)

இனி ஆங்கிலம்பற்றிச் சிறிது அமையச் சொல்வோம். வயிற்றுக்குழி தூர்த்தலினிமித்தமும், அதிகாரநிலைமையெய்திப் பொருள் பெருக்குத னிமித்தமும், மகளிர் நலந் துய்த்தலி னிமித்தமு மாதியான பலவகைச் சிறுமை யின்பங்களை நுகர்தற்குத் துணையெனநினைந்து கெட்டுருப்பாடத்துக்குப் பலர் ஆவிகொடுத்து நாள் ஒழிப்பது நம் நாட்டுவழக்கமாக முடிந்து விட்டது. இகபரசாதனம் வேண்டுமேயெனக் கனவினும் எண்ணலுண்டா? ஒருபோதுமில்லை. தின்னவுந் தேய்த்தலுமே உன்னதநிலையென்பதாகச் சிலர்களுடைய கற்ற அறிவு முனைகின்றன. வித்தியாரம்பகால முதற்கொண்டே கலாசாலையில், தெய்வவணக்கமும் சீரிய ஒழுக்கும் உண்டா? யானைப்பாடம், பூனைப்பாடம், தவளைப்பாடம், ஞெண்டுப்பாடம், எலிப்பாடம், ஈப்பாடம், ஓணன்பாடம், உடும்புப்பாடம், கூகைப்பாடம், குரங்குப்பாடம், பாம்புப்பாடம் பல்லிப்பாடம், ஆட்டுப்பாடம், கோழிப்பாடம், மாட்டுப்பாடம், மந்திப்பாடம், முதலியவைகளையே ஆரம்பித்து, யானைக்குக் கால்நான்கு, வால்ஒன்று, தும்பிக்கை ஒன்று, காது இரண்டு, கண் இரண்டு, முதலிய அவயவாதிகளைச் சுட்டிக் கற்பிக்கு முறையிலிருந்தே உலகில்தெரியும் கீழ்ப்பிறவி யமைப்புகளின் குறிகளை அறிவிக்கிறார்கள். இப்பிறவிக்கு, முதற் காரணம் எது, நிமித்தகாரணம் எது, துணைக்காரணம்எது, வினைத்தொடர்புகள்எவை. இன்புந் துன்பும் உயிர்கட்கு எவ்வாறு நிகழ்கின்றன. உயிர் அல்லலை ஒழித்து, இறைவன் அடிநீழலடைந்து நலந்துய்த்தல் யாண்டுநிகழும், என்பன முதலான மேல்நிலைகளைத் தெரியும் பாடங்களுண்டா? இக்கீழ்த்தரப் போதனாமுறையிலிருந்தே சிலர் மனதுதடித்து அறிவுபின்னி ஆத்திகக்கொள்கையை இகழ முற்படுகின்றனராவர். நல்லொழுக்க உயர்நிலைகளினின்றும் வழுவினரைப்பற்றிமட்டும் சொல்லவந்ததன்றி, அவை பெற்றோரை இவைகள் குறிக்கொண்டதில்லை யென்க. கலாசாலையில் வகுப்புமாறி, அறிவுபரந்து படிப்பு உயர உயர, சிலர், உலகில் இறைவன் இயக்கும் உயிர்த்திரள்களையெல்லாந் திரணமாகவும், தாம்மட்டும் பொன்னுலக ஆதிக்கம்பெற்றவர்களென்றும் பாவித்து உருட்டும் மருட்டுமான செயல்களை மேற்கொண்டு பாதி ஆங்கிலமும் பாதித் தமிழுமாகப் பின்னிப்பின்னிப் பேசித் தாமேதம்மைக் கௌரவமாகக்கருதிக் களிக் காணுகிறார்கள்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்ற பொன்மொழிப்பாவும் ஈண்டு நினைக்கத் தக்கதாகும். இளம்பருவ முதற்கொண்டே மேல்நிலைப்பாடங்களும், தெய்வவழிபாடுகளும், பெரியார்ப்பணிதலும், முதலிய உயரிய முறைகள் மனதில் தோயாது, கீழ் அமைப்புகளிலேயே, மனதும் அறிவும் பழகிவிட்டதால், பின்னர் வாழ்நாள் முடியுமளவும் நாஸ்திகக் கொள்கைகளையே அழுந்த எண்ணியெண்ணி, அதற்குத் தக்க செயல்களனைத்தும் இழைத்துப், பிறவிப்பயன்கள் ஒன்றும் பெறாது உடலை ஒழிக்க முடிந்துவிடுகின்றது. ஞானநூல், மோக்ஷநூல்களென (மொழிபெயர்ப்புக்களையன்றி) இயற்கையில் ஆங்கிலத்தில் காணக்கிடைக்குமா? இல்லை. நாவல்களும் நாடகங்களும், சயன்ஸ் முதலான விநோதவகைகளே மலிந்து கிடக்கின்றன. பீ. ஏ., யம். ஏ., பரீக்ஷையான சிலமகான்கள் நம்மவர்கள், திருநீறும், திருநாமமும் இட நாணி, வாசனையெண்ணெயும், பவுடர் பொடியுந் தமக்கு நாகரீகமாகக் கொண்டனராவர். தாய்மொழியில் ஊன்றப்படித்து முதிர்ந்த அறிஞர்கள் இறைவனது அருட் பெருக்கத்தை உன்னி, பூசையாற்றுதலும், திருநாமஞ் செபித்தலும், கோயில் சந்நிதானங்களில் பிறவித் துன்பங்களை நினைந்து நினைந்து நெக்குருகிக் கண்ணீர் துளும்ப இறைவனை வேண்டுதலும், யாவரிடத்தும் அன்பும் அருளுந் தாங்கி நிற்கப் பேசுதலுமாகிய பிற நன்னிலைகளையுங் கையாளுகின்றனர்கள். இவற்றை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆங்கிலப் பரீக்ஷை பெற்ற சிலர்களோ, படிப்பின் கௌரவம் யாருக்குந் தெரிய வேண்டுமெனச் சொக்காய் ஒன்றை மாட்டிக் கொண்டு, முதல் தரம் மாமியார் வீட்டுக்கு மருமகன் மருவுக்குவந்து நிற்பதுபோல் கையையுங் காலையும் ஆட்டிக் கொண்டு தலைவெட்டு மயிரை நிமிடத்தக்கு நிமிடங் கையால் தடவிவிட்டுக்கொண்டு இளஞ் சிரிப்புடன் நாட்டியமாதென சந்நிதானத்தில் குறாவடை பழகுகின்றார்களே? அறிஞர்கள் இக் கோலத்தைப்

பார்ப்பின், பிறவிப் பேறு பாழாய் முடிந்ததே யென வருந்துகின்றார்களே? கலாசாலைச் சிற்றறிவை, இறைவன் நியமனப் பொருள்களில் ஈடுபடுத்திச் சூரியன் தோற்றம் எவ்வாறு, சந்திரன் தோற்றம் எவ்வாறு, அக்கினியின் தோற்றம் எவ்வாறு, உலக சக்தியின் தோற்றம் எவ்வாறு, என்பனவாக முதலிய அசாசாரப் பீடைத்தனமான ஆராய்ச்சிக்கும் முற்படுகின்றனரே? அன்றியும் இறைவனின் நியமனத் திறன் பலவும் எங்ஙனம் வந்ததாகு மெனவும் யூகிக்கின்றனரே? நாம் சில நாட் பல்பிணிச் சிற்றறி வுடையோ மன்றோ வென்பதை நினைத்தல் வேண்டாவோ? சிவஞான சாத்திரப் பெரும் பொருளைச் செவ்விபெற வாய்மலர்ந்த குமரகுருபரஸ்வாமிகள்,

கண்ணுதற் கடவுள்,

> கற்பனை கழன்று நிற்றலின்
> நிற்பது இக்நிலை யெனும் நியமமோ, இன்றே—

என்பதாக, ஓரிடத்து நிலைமைகூறுகின்றனர். அன்றி நம் தெய்வீகத் தமிழ் வேதத்தில், "இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டொணாதே—எனக் காணக் கிடக்கின்றது. பரத்துவ நிலைமை கூறுமிடத்தில், கல்வியிற் பெரிய கம்பரும்," "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாதநின்ற சுடரே" என விண்ணவர் கோமான் வாக்கில் வைத்துப் புகழ்கின்றனர். எல்லாமாய் அல்லதுமாய் என்பதுவும், மற்றோரிடத்தில் காணப்படும் ஒரு பிரயோகம். உயிர்களை இருவினைகளுக்குத் தக்கபடி இயக்கும் நியமனங்களை இறைவன் அந்தர்யாமியாக நடத்துபவனாக இருந்துங் குணதோஷங்களில் ஈடுபடாமல் நிற்கும் நிலைதான், தோயாமல் நிற்கும் நிலை. பரந்த உலகங்களில் விரிந்த அருட்பெருக்கத் திறனை உத்தாரணஞ் செய்ய மருட் பிறவி பெற்ற நாமா வல்லுநர். வீட்டு நிலை சொல்லுமிடத்துப் பேரறிஞர்கள், பிறவித் தோற்றத்தையும் உலக நிலைமையையும், நெருப்பாறும் மயிர்ப் பாலமுமென ஓர் அழகிய தொடர்பு கொடுத்து உவமங் காட்டி யுண்மையைப் பதிய வைத்திருக்கின்றார்கள். ஆங்கில மொழிக்கண், உலக நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை. முதலியவைகளைப் பற்றி இயற்கை அமைப்பாக ஒரு வரி எங்கேனும் காணக் கிடைக்குமா? இல்லையே. படிப்பு ஆரம்பத்திலிருந்து பணிவு என்பதே கிடையாதிலிருந்து, கற்ற அறிவுந் திமிர் ஏறிப் பயன் பெறுதலில்லை. நிறைகுடம் நீர்தளும்பல் இல், என்றபடி ஆங்கிலமொழிக் கண்ணும் பூரண அறிவுபடைத்தோர்கள் அமைதி, தெய்வவழிபாடு, முதலிய நன்னெறிகொண் டொழுகுகின்றார்கள். நால், அவைகளிடந்தான், பிறழ்ந்த செயலும் உறழ்ந்த ஒழுக்கும், காணப்பட்டுத் தவம்நிறைந்த நம் தமிழ்நாட்டுச் சீர்குலை கின்றது. வளம் பரந்த இந்நாடு, வறுமைவாய்ப் பட்டதற்குக் காரணம், பெரும்பான்மையாகத் தெய்வநம்பிக்கைக் குறைபாடாகும். ஆரூர் அடிகள் "குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன். ஆள்இலை எம்பெருமான் இவை அட்டித்தரப் பணியே," என வேண்டிக் கொண்டவாறு, இறைவன் செய்துவைத்தனராவர். அதுபோல உண்மையான அன்புடைமைக்குத் தக நம்மிடம் இறைவனும் அன்பு பாராட்டுகிறான் ஆங்கில அறிவு இக்காலத்துக்கு முக்கியமாகக் காணப்படினும் அதுபற்றித் தாய்மொழிக்கு ஊனம் புகுத்துவது பெரும்பேடித்தனமன்றிப் பேரறிவுடைமையாகாது. ஈச்வரனை, மணிவாசகனார் அன்பின் முதிர்ச்சிபெற்றுப் பரவசப்படும் பொழுதுகூட "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே—" என்பதாகத்தான் முதலில் விளிக்கின்றனராவர். யாரினும் அன்னை, முன்னுவதுபோல எம்மொழியினும் தாய்மொழி அளவுகடந்த ஏற்றம் பெற்றதென்க. பிற்காலத்தார் ஒருவர் தமிழ்ப்பெரு மாண்பு சாற்றுமிடத்துப்,

> பத்துப் பாட்டின் வித்தக நடையும்
> மணிமே கலையின் அணிகெழு போக்கும்
> சிலப்பதி காரத் திலக்கியச் செலவும்
> புறநா னூற்றின் திறனுர் செயலும்
> சிந்தா மணியின் நந்தா அழகும்
> தொல்காப் பியத்தின் ஒல்காப் பெருமையும்
> கலித்தொகை கிடக்கும் கலைத்தரு பொருளும்
> குறுந்தொகை விளக்கும் அரும்பெரும் போக்கும்
> அகநா னூற்றின் மிகுசீர் வளப்பும்
> கல்லா டத்தின் அல்கா வமைதியும்
> பெரிய புராணத் தயரன் பமைவும்
> கம்பன் கவியின் செம்பொரு ளின்பும்
> திருவள் ளுவரின் அருமொழி நயமும்
> உண்டோ பிறமொழிக் குண்டோ வுன்னதம்
> தெய்வத் தமிழே உய்யக் கிடப்பது
> கற்பீ ரென்றுங் கற்றின் புறுவீர்
> வருக வருக மாண்புடை யீரே

என இன்னும் பலதொடர்புகாட்டி ஆவேசத்துடன் வீறு பேசுகின்றனராவர். ஆகவே, உடல்வளர்ப்புக்கு மட்டுஞ் சிலர்கட்குத் துணையாகநிற்பது ஆங்கிலமெனவும், உடலையும் உயிரையும் பதவிபெற உன்னதத்தில் ஏற்றுவது நமது தாய்மொழியென்பதுவும் எனது தீர்மானமென்க. புறக்கணித்துப் பேசுங்கூட்டம் இக்காலத்தில் பெரும்பான்மையாக மலிந்திருப்பதால் இவ்வியாசம்பற்றிக் குறைபாடு கூறுவாரு மிருத்தல்கூடும்.

> "குற்றமே தெரிவார் குறுமாமுனி
> சொற்றபாவினும், ஓர்குறை சொல்வரால்,—

என்பது உலக இயல்பாகலின் அச்செயல்கள் அறிஞர்களது அங்கீகாரத்துக்கு அமைந்ததல்லவாகும்.

சுபம். N. ராமசாமி பிள்ளை,

தமிழன்.

குறிப்பு:—தமிழைப் புறக்கணித்துத் தூங்குவோர்க்கோர் தூண்டுகோலாய் இருக்குமென்று இக்கட்டுரையை உவகையோடு எம்பத்திரிகையில் பிரசாஞ் செய்தோம். எனினும், அதனிற்கண்ட கருத்து யாவும் எம்மால் ஏற்றுக்கொள்ள இயன்றவல்ல. ஆங்கிலத்தில் அரைகுறை அறிவுளார்க்கு இவர் காட்டும் குற்றம்யாவும் குறைந்தகல்வி தமிழிலிருப்பார்க்கும் பொருந்தும். ஆங்கிலத்தில் எத்துணைப் பயிற்சி இவ்வாசிரயர்க்கு உளதென்று யாம் அறியோம். எனினும் அப்பாடை நூல்களின் பழக்கமும் ஓரளவு பெற்றிலராயின் தமிழோடு அதைவைத்துச் சீர்தூக்க நினைத்திரார். ஆயின் நீதிநூல்களும் ஞானநூல்களும் ஆங்கிலத்திலில்லை என்று அவர் விளம்புவது வியப்பைத் தருகின்றது. எப்பாடையினும் ஆழ்ந்து கற்பாரில்லாக் குறையே யன்றி நூல்கள் இல்லாக் குறையில்லை. பாடசாலைகளில் அநுசரிக்கும் போதனாமுறையில் பழுதுளதென்று ஓதி ஆணிப்பாடத்தையும் பூணிப்பாடத்தையும் அவர் பழிக்குமளவு நாமும் பழிக்கின்றோம். ஆனால் வானசாஸ்திர பூதசாஸ்திரங்கள் மற்றச்சாஸ்திர ஆராய்ச்சிகளை அவர் வைவது அவைகளாலெழும் தத்துவ உணர்ச்சியை ஓர்ந்திராததால் நேர்ந்திருக்கவேண்டும். இதனை நாம் கட்டுரையின் குற்றமாகக் கூறவில்லையாதலால் அவர் முடிவில் அச்சுறுத்தியதற்கு ஆளானோம்.

பத்திராசிரியன்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

6 கையடைப் படலம்.

[594-ம் பக்கத் தொடர்ச்சி]

தெய்வ மாக்கவி மாட்சி தெரிந்ததோ!

வால்மீகத்திலே, இராமனை விச்வாமித்திரனோடு அனுப்புவதே வேண்டும் என்பதற்கு வசிட்டன் தயாதனுக்கு எடுத்துக் காட்டுகின்ற காரணங்கள் மூன்று. முதற்காரணமாக,

> "இன்னபடி நடக்கின்றேன் என்று வாக்குக் கொடுத்தால் அதற்கேற்றபடி நடக்கவேவேண்டும். அப்படி நடவாதபக்ஷத்தில், செய்த தருமங்களெல்லாம் பயனில்லாதன வாம்,"

என்று காட்டுவார் வசிட்டர். கம்பர் இக்காரணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், தன் நூலின்படி தயாதன் 'இன்னபடி நடக்கின்றேன்' என்று வாக்குக் கொடுத்திலன். மேலும் இந்தப் புத்திமதி மறவேந்தனுக்கு ஏற்றதாகுமே அல்லாது அறவேந்தனுக்கு இதனினும் வேறோர் அபவாதம் வேண்டா. அறத்தின் உருவம்போன்ற அரசர் ஆற்றுகின்ற செயல்கள் எவையோ அவைதாம் தருமம். நற்றருமமன்றிப் பிறிதொன்றும் அவர் ஆற்ற அறியார். அது அவர் இயற்கை. எனின், தருமத்தைத் தருமமென்று சிந்தித்து அதனால் ஒரு பலனைப் பெறுவதையும் நோக்கமாக முன்வைத்து எக்கருமமும் செய்யக் கற்றவர் அறவோரல்லர். அவரவர் தருமத்தை அவ்வந்த தருமத்திற்காகவே செய்வதே அறமென்றால் அத்தருமத்திற்கு அயலாகப் பலனென்று உளதெனும் உரை பொருளற்றதாகும். பலன் கருதிய அறங்கள் யாவும் நுண்ணிதின் ஆராய்ந்தால் மறங்களாகவே முடியும். வழிபறி கொள்ளையடித்துச் சிலர் பசியாது எந்நாளும் உண்டிருக்கப் பார்க்கின்றனர். அன்னதானம் செய்தால் தமக்கு ஐசுவரியம் பெருகுமென்று சிலர் செய்கின்றனர். இவ்விருதிறத்தோர்க்கும் நோக்கம் ஒன்றே, மார்க்கம் வேறு. முன்னது பழிப்பிற் கிடமாய மறம், பின்னது பழிப்பிலா மறம். இரண்டும் அறமல்ல. வடநூல் தயாதன் மறமன்னன் ஆதலாலும், அதனை வசிட்டன் அறிந்ததாலும் 'வாக்குப் பிறழ்தாயாயின் நீ செய்த தருமங்கள் யாவும் பயனற்றுப் போம்,' என்னும் மொழிகள் அங்குப் பயமுறுத்துகின்றன. அறவேந்தன் செவிகளில் இவை செல்லாவென்பதுணர்ந்த வசிட்டன் அச்சொற்களால் இங்கு அச்சுறுத்தவில்லை.

இரண்டவதாக, விச்வாமித்திரனின் தவத்தின் அளவும் வலியும் வசிட்டன் கூறி, இராமனுக் கொரு தீங்கும் வாராமல் காக்கவல்லவன் அவன் என்று தயாதனைத் தேற்றுகின்றான். இதனையுங் கம்பர் கைக்கொண்டிலர். ஏனெனில், வால்மீகத்திலே வசிட்டன் விச்வாமித்திரனது பெருமையும் ஆற்றலும் எடுத்தோதுவதெல்லாம் தசாதனுக்கு அறிவுறுத்தற் கன்று. அது கதையாதலால் வசிட்டன் மன்னனுக்குச் செப்பும் முகமாக அவ்வடமொழிப்புலவர்வாள் தவத்தில் வாசகர்களுடனேயே பேசுகின்றார். அறுபதினாயிர வயதுநிறைந்த தயாதன் கோசிகனின் தவப்பெருமையைத் தெரிந்திலாதிருப்பானோ? நாடகத்தின் பாத்திரங்கள் தமக்காகப் பேசிக்கொள்வார்களேயல்லாமல் நமக்காக வாய்திறவார். ஆதலால் கம்பர் அவ்வாசகங்களைக் கொள்ளாது விட்டார். அவ்வாறே, வால்மீகக்கதையில் வந்த விச்வாமித்திரன் தானே அரக்கரை அழிக்காது இராமனது உதவியை வேண்டுவதற்குக் காரணம் காட்டுவானாய்,"யாகத்துக்குத் தீக்ஷைபண்ணிக் கொண்டிருக்கிறவன் கோபத்துக்கு இடங்கொடுக்கலாகாதென்பது விதியாகையால், கோபங்கொண்டு அவர்களைச் சபிக்க எனக்குப் புத்திவரவில்லை" என்றும், பின் வசிட்டன் "அரக்கர்களைத் தாமாகவே கொல்ல விச்வாமித்திரரால் முடியும் என்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும்" என்றும் தயாதனுக்குத் தெரிந்திருக்க வேண்டியதைச் சொல்லிக்காட்டுவது கம்பர் நாடகத்திற் காண்கிலம்.

இவ்விரண்டு காரணங்களையும் விலக்கித் தன் வசிட்டன் கூறுதற்கொத்ததென்று கம்பர் ஏற்றுக்கொண்டது, "இவர் இப்பொழுது உம்மை அடைந்து இராமனை யாசிப்பதெல்லாம் இராமனுடைய நன்மைக்காகவே அல்லாது வேறன்று" என்று அங்குக் கூறிமுடித்ததையே யாகும். போாற்றல் கோசிகன் உடன்இருக்க இராமனுக்குத் தீதொன்றும் நேரா தென்பதை "நின்மகற்கு உறுத்தலாகலா" என்றதாலும், அவனுக்கு நன்மை உண்டாகும் என்பதை "உறுதி எய்துாான் மறுத்தியோ?" வென்றதாலும் விளம்பி, இளவலை விச்வாமித்திரனோடு அனுப்புமாறு வசிட்டன் இங்கு விதிக்கின்றான். வால்மீகத்திலே, இராமனுக்கு வரக்கூடிய நன்மை இன்னதென்று வசிட்டன் செப்பவில்லை.கோசிகன் அடைந்தவஸ்திரங்களின் வரலாறும் வன்மையும் வசிட்டன் இயம்பியது, அதனால் அக்கோசிகனது ஆற்றலை எடுத்துக்காட்டி இராமனுக்குத் தீங்குவாாதென்று தயாதனைத் தேற்றுவதற்கேயாம். அவ்வஸ்திரங்களை அவன் இராமனுக்கு அளிப்பானென்று ஒன்றுங் குறித்திலன். கம்பர் இவ்விரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்துக் கோசிகனிடத்திலிருந்து அஸ்திரங்கள் பெறுவதாகிய இலாபத்தை இராமன் அடைவான் என்று வசிட்டனைக் காட்டவைக்கின்றார். அது,

> பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
> மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
> ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்
> தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே

என்னும் செய்யுளால் தெரிகின்றது. இவ்வுவமையை ஏன் இங்கு வசிட்டன் எடுத்துக்காட்டினான் என்பது சிறிது உற்றுநோக்குதற் கொத்தது. "நானிங்கு இருக்கின்றேனென்று மதியாது இக்கோசிகன் கொண்ட சீற்றத்திற்கு அஞ்சியன்று நான் இராமனை அனுப்பச்சொல்வது; மற்று நீ செய்த தவமெல்லாம் பலனில்லாமற் போகுமே என்று மன்று. இராமனுடைய நன்மையை நாடியே அனுப்பச் சொல்கின்றேன்" என இயம்ப வேண்டியது வசிட்டனுக்கு இன்றியமையாத தாயிற்று. ஆயினும், உலகெலாம் உளவாக்கி உண்டுமிழும் பரமனுக்கு ஒரு முனிவனால் நன்மை உண்டாகும் என்று சொல்லிவரும் வாயை முழுதறிந்த வசிட்டனின் மனம் மறுக்கின்றது. ஆதலால், கடல்நீரே மறுபடி கடலைச் சேர்வதுபோல் எல்லாவற்றிற்கும் இறைவனான இராமனை, அவனிடத்திலிருந்தே உற்பத்தியாகிய அத்திரங்கள், மீண்டும் போய்ச் சேர்கின்றன, என்று கூறும் ஆற்றால் வசிட்டன் தன் மனதிற்கே சமாதானம் தேடிக்

கொள்பவனுகின்றான். மேகம் கடலிற்கு நீர்கொடுப்பது போல் தோன்றினும் உண்மையில் தன்னின்று ஒன்று தந்ததில்லை. கடல்நின்றகன்றதே மீண்டுமதன்பால் வந்தெய்துகின்றது. இக்கருத்தினை உட்கொண்டு கம்பர், பின் தாடகையை வதைத்த பின்னர் இராமனுக்கு விச்வாமித்திரன் அஸ்திரங்களை அளிக்கவும் அவை,

ஆறிய வறிஞன் கூறி யளித்தலு மண்ண றன்பால்
ஊறிய உவகை யோடு மும்பர்தம் படைக ளெல்லாம்
தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்க ளெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி வருவபோல் வந்த வன்றே.

[அரக்கரால் உற்றதுயர் நீங்கிய கோசிகன் தக்க மந்திரங்களைச் சொல்லிக் கொடுக்கவும், அந்தத் தேவாஸ்திரங்கள் எல்லாம், மனதோடு செய்த நல்வினைப் பயன்கள் மறுபிறப்பில் தேடி வந்தடைவதைப்போல், மிகுந்த சந்தோஷத்தோடு இராமனிடம் வந்துசேர்ந்தன.]

என்பதாலும், மற்றயாவையும்போல் அத்திரமும் அவன் செயலே என்பதைத் தெளிவுறச் சாற்றுகின்றார்.

இனி, மேல்நிகழ்ந்தன நோக்குவோம். தன் தொல்குலத் தாயருந் தந்தையுந் தவமும் அன்பினால் மேயவான் கடவுளும் பிறவும் என்றபடி அமைந்த வசிட்டனாகிய

குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன னென்ற லோடும்வந்
தருகு சார்ந்தன னறிவி னும்பரான்.

[குருவினது வார்த்தையை ஏற்றுக்கொண்டு தயரதன், ஏவலாளரை நோக்கி "நீங்கள் சென்று திருவின் கேள்வனை அழைத்துவாருங்கள்" என்று சொல்ல, அவர்கள் இராமனிடம்போய், 'நின் தந்தை உன்னை வரச்சொன்னார்' என்றவுடன், தேவாறிவிற்கும் பிறர்க்கும் எட்டாத மேலானவனான அவன் அருகேவந்து சேர்ந்தனன்.]

திரு என்பதற்கு அழகு செல்வம் முதலியபொருள்களும், கேள்வன் என்பதற்கு நட்புடையவன் என்னும் பொருளும் இருத்தலாலே தயரதன் 'திருவின் கேள்வன்' என்னும்தொடரைச் செல்வன் அழகன்என்ற கருத்தில் வழங்கினனெனினும், பின்னாள் இச்செல்கையால் இராமன் இலக்குமிக்குமீண்டும் நாயகன்ஆகப்போவதை உணர்ந்த நாம்மன்னனின் இவ்வாய்ச்சொல்கேட்டு வியக்கின்றோம். வருவதுணர்ந்த வசிட்டனும்விச்வாமித்திரனும்,"நம்மைப்போல் இத்தயாதனும் தெரிந்து செப்பினானோ" வெனத் தம்முள் எதிர்நோக்கி யிருப்பார். "என்குலம்செய்ததவத்தால் நீ இங்குவந்தனை" என்று கோசிகனுக்கு அரசன் கூறிய முகமனில் அடங்கியிருப்பது போன்றே இங்குத் "திருவின் கேள்வன் என்றதிலும்," Dramatic Irony என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற அணியொன்று அடங்கியிருக்கின்றது. இதனிற்கு நோகத் தமிழில்ஓராதுணைந்தலணி என்று கற்பித்தல் ஒருவாறு பொருந்தலாம். இவ்வணிப்பெயர் தமிழிலில்லாததால் தமிழ்ப்புலவர்க்கு அதனுளடங்கிய கருத்தும் நயமும் எட்டியதில்லை என்று எண்ண இடமில்லாமல் தமிழ்மொழி இலக்கியங்களில் இது விரவி வந்திருக்கக் காண்கின்றோம்.

இராமனும் அவனோடு நிழலென இழையென இணைபிரியாத் தம்பி இலக்குமணனும் வந்து சேர்ந்தனர். அழைக்காது வந்த இலக்குமணனையும் தயரதன் கௌாத விச்வாமித்திரனுக்குக் கையடைத்து,

தந்தை நீதனித் தாயு நீயிவர்க்
கெந்தை தந்தனன் இயைந்த செய்க

என்றான். கொடுக்கின்ற புத்திரர்மீ திருக்கின்ற அன்பும், அவர்களை ஏற்கின்ற முனிவனின் உயர்வும் பிரிகின்ற தந்தையின் பரிவும் ஒருங்கே அமைய எளிதினும் இவ்வெளிய சொற்களால் கம்பரன்றிப் பிறரால் பாடலாவதருமை.

இராமன் படைக்கோலங் கொண்டு கோசிகனோடு புறப்படுவதைக் கூறுகின்ற செய்யுள் கருத்துமிகத் தன்னுள் செறியப்பெற்றது. மசாதமனையரை நீறுசெய்வேனெனமுன் அமாருக்கு அளித்தவாக்கை நிறைவேற்ற இன்றே வலக்காலை முன்வைத்து ஏகுகின்றான் இராமன். அன்று அத்தொழிலிற்கு ஏற்றவை 'நிசாதக் கணைகளே' என்று திருமால் இயம்பியதை மறவாது கம்பர்

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றுந் தேய்வுறுத் தூணி யார்த்திரு
குன்று போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்று தாங்கினு னுலகந் தாங்கினான்

[வெற்றி வாய்ந்த வாளைப்பக்கத்திலே கட்டி, சத்தியத்தைப்போல் கொள்ளக் கொள்ள ஒருநாளும் குறையாத அம்புறாத்தூணியை, குன்றுபோல உயர்ந்த இரண்டு தோள்களி லொன்றில் கட்டி,மற்றதில் வெற்றி பொருந்திய ஒரு வில்லையும் தாங்கினான் உலகெலாம் தாங்குபவனாகிய அவ்விராமன்]

எனவே அம்புறாத்தூணியை மெய்ம்மைக்கு நிகராக நினைவிலூட்டுவார்.

இன்னவிதமே கலையொழுக்கம் குன்றாத கம்பர் முன்னும் பின்னும் நினைத்தொரு கருத்தை வளர்க்கின்ற வாய்மையை இதற்கடுத்துவரும் செய்யுளிலும் இனிது காணலாம். போர்க்கோலங்கொண்டு தம்பி உடன்வர முனிவனைப் பின்தொடரும் இராமன் அகலஅகல்க்கண்ட தயாதற்குத் தன்னுயிரே நடந்ததுபோல் தோன்றுவது இயற்கையே. ஆதலால்,

அன்ன தம்பியுந் தானு மையனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவற் றொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான்.

[அன்னவிதமாய்த் தம்பியும் தானும், தந்தையாகிய வேந்தனது இனிய உயிர் வழிநடந்து போவதைப் போலவே, சுவர்ண நிறமான முனிவனைத் தொடர்ந்த சாயைக்கு நிகராக, அயோத்தியின் பொன்மதிலைக் கடந்து போயினான்]

என்றார் கம்பர். இவ்வுவமையின் அழகு ஒருபுறம் மகிழ்விக்க அதனை எண்ணூறு செய்யுள்களுக்கப்பால் முடிக்கின்ற திறத்தினாலே கவி நம்மனதைப் பெரியதோர் வியப்பினில் ஆழ்த்துகின்றார். உயிரென முனிவனின் பின்போன தனயன், தாடகையைக் கொன்று வேள்வியைக்காத்து அகலிகையை அளித்து, வில்லையிறுத்து மிதிலையிலிருக்க, அவனது திருமண வோலை காணப்பெற்ற தயாதன் அந்நகர் வந்தெய்த, அந்தக்காலை,

காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினான்.

[காவியும் குவளையும் காயாமலரையும் ஒத்தநிறத்தனாய், சித்திரம் பின்னிடச் சிறந்தவோர் பொலிவுடைய உருவத்தோடே, தேவரும் வணங்கப்பெற்ற பாதத்தையுடைய சிறவனாகிய இராமன், முன்னான் பிரிந்தகன்ற தயாதனின் ஆவி மீண்டு வந்ததென்ன அரசனுக்கு அருகேவந்து சேர்ந்தான்]

என்னும் வாயிலாகக் கம்பர்பிரான் எடுத்த உவமையைத் தொடுத்து முடிக்கின்றார்.

கையடைப்படலம் முடிகின்றது. வான்மீகி முனிவரையும் கம்பரையும் இணைத்துவைத்து நாமிதுகாறும் ஒப்புநோக்கியதினின்று அவருக்கு இவர் எத்துணைக் கடமைப்பட்டுளார் என்பது நன்கு புலப்படும். கம்பரது நூலின் அழகிற்கும் பெருமைக்கும் வற்றாக் களஞ்சியமாயிருப்பது வடமொழிக் காவியமே. எடுப்பன எடுத்தும் விடுப்பன விடுத்தும் இன்னவாறு கம்பரின் கைத்திறங்காட்டுவதற்கு இடமாயிருக்கின்ற வடமொழி முதனூலின் வளம் பெரியதே. அதனைக் கலையுணர்வால் ஆய்ந்துகொண்ட கம்பரின் ஆற்றலும் அருமையே!

T. N. சேஷாசலம்.

மதிப்புரை.

அன்னபூர்ணாலயம்.

ஆசிரியர், T. இராமலிங்கம் பிள்ளை, M. A., (திருவிதாங்கூர் அரசாங்கத் தலைமை மொழிபெயர்ப்பாளர்) 'மங்கலபவனம்', திருவனந்தபுரம்.

விலை :— நல்நிலையப்பதிப்பு, ரூ. 1-4-0; சாதாரணப் பதிப்பு 1-0-0.

தமிழின் பெரும்பாகம் இந்நாள் தன்னிலையழிந்து நாவலெனும் பாலையாய்க் கிடக்க அதனிடையே தண்ணறும் பொழிலொன்று பெற்றதுபோல் இந்நூலெய்தி மகிழ்கின்றோம். நிருபமாதேவியார் வங்காள பாஷையில் வரைந்த அன்னபூர்ண மந்திரம் என்னும் நாவலிற்கு மலையாளத்தில் ஸ்ரீமான், நாராயண பணிகர் செய்துள மொழிபெயர்ப்பைத் தழுவித் தமிழில் இது எழுதப்பெற்றுளதென்று நூன்முகத்தினின்று தெரியவருகின்றது. சுத்தமான தமிழில் நேரிதான வோர் இல்லக்கதையை இதனிற் காணலாம். இராமசங்கா பட்டாசாரியாரின் வறுமையிற் குறைவற்ற வீடே இக்கதை நிகழுங்களம். குசேலாது குடும்பச் செய்திகளிற் பல இச்சரிதத்தில் தோன்றுகின்றன. ஆனால், வறுமையை வறுமையென்றுணராமல் விவகரித்த குசேலருக்கு, நினைந்து நைந்து கொந்திறந்த பட்டாசாரியார் பலபடி குறைந்து போனாலும், அவ்வறுமையைத் தீர்ப்பதற்குத் தன் கணவனைத் தூண்டாத்தன்மையால் இவர் மனைவி ஜானவி, சுசீலையைப் பார்க்கிலும் ஒருபடி உயர்ந்து பொலிகின்றாள்.

பட்டாசாரியாரின் மகளிர் லலி ஸாவித்ரி என்னும் இருவர்தம் குணமும் செயலும், மூத்தவளின் முடிவும் மனமுருக்குந் தன்மையன. குலாசாரம் வழுவப்படாதென்று லலிக்கு வயோதிகப் புருடனை மணஞ்செய்வித்தலும், மணந்தவனைக் கண் காணாது வாழ்வதும், அவனிறக்க விதவையாய்ப் போவதும், பின்தன் குடும்பத்தார் இடுக்கணும் தன்மானமும் ஒருங்கேகாக்கத் தற்கொலை புரிந்து கொள்வதும் இயற்கையோடியன்று தொடர்ந்து வருகின்றன. இளமையும் செல்வமும் கல்வியும் வாய்ந்த கதாநாயகன் விசுவேசுரன் நற்குணமும் அருளும் பெருந்தன்மையும் உடையவனா யிருந்தும் காதலென்பது வளர்தற்கியலாக் கன்மார்ப னாதலாலே லலியின் கதி அவ்வாறு முடிந்ததென்று கதையை அமைத்த திறம் பாராட்டத் தக்கது. தற்கொலை புரிந்துகொள்ளுமுன் இவையெல்லாம் வரைந்து லலி விசுவேசுரனுக்கனுப்பிய கடிதம், (சற்றுச் சுருக்கமாயிருக்குமாயின் சுவை சிறிது மிகுந்திருக்கு மெனினும்) கண்ணீருருக்குந் தன்மைத்து. அக்கடிதத்தில் அவன், காதலென்பதொன்று விச்வேசுரனிற் கில்லை என்று இடித்துரைத்தது உண்மையே என்பதற்குப் பின்னுளிவன் ஸாவித்திரிக்குத் தன்பால் காதல் குறிப்புளதோ வென்றறிய, "ஸாவித்திரி, நீ என்னிடத்தில் ஏதேனுஞ் சொல்லிக்கொள்ள விரும்புகிறாயா, விரும்பினால் சொல்லிக்கொள்" என்று தூக்குமரத் தடியில் சுருக்கிடும் குற்றவாளியைக் கேட்கும் முறையில் கேட்கின்ற தொன்றே சான்று போதும்.

முக்கியமான இவர்களைச் சுற்றிவரும் மற்றப்பாத்திரங்களும் தக்கபடி அமைந்திருக்கின்றன. கதையையும், அதுபோன்றே தூய்மையும்எளிமையும் பெற்று நடக்கும்தமிழ் நடையையும் கற்றவர்யாவரும் நன்குமதிப்பர். ஆனால், ஐவேஜி லேவாதேவி மும்முரம் மாமூல் தகவல்,போன்ற இலக்கிய மருவாச் சொற்களை விலக்கின் நலமாம்.

கதையின் அமைப்பும் தமிழின் நயமும் நன்கமைந்திருக்கின்ற இந்நூலின் கலைத்திறத்தை ஆசிரியர், சனசமூகச் சீர்திருத்த ஆர்வத்தால் ஒருசிறிது குறைத்துவிட்டாரென்றே வருந்துகின்றோம். வரதக்ஷிணை கொடுக்கவேண்டியேஇப்பட்டாசாரியாரின் குடும்பம்கெட்டதெனக்கூறுவாராயின் குறைகொள்ளோம். ஆனால் இந்த நாவலை வரதக்ஷிணை வாங்குவதும் அதுபோன்ற பிறவுமான "மனிதனுடையவும் சமூகங்களுடையவும் பழக்க வழக்க ஆசாரக்கொடுமையிலகப்பட்டுவருந்துபவர்களின் துன்பத்தை" எடுத்துக்காட்டுவதற்கு ஒரு நிபமாக வைத்து, அவைகளுக்கு விரோதமாய்ப் 'பிரசாரம்' செய்வார்போல் பாத்திரங்களினின்று கழன்று தன்பொறுப்பிலே இவ்வாசிரியர் பேசத்தலைப்படும் போதெல்லாம் கலையுணர்வு கழிந்ததென்னும் கலக்கம்நம்மனத்தே உண்டாகின்றது. கதையொடு கலையுங் காத்த நூல்களே காவியப் பெருமைக்குரியன.

* * *

திருக்குறள்.

வா. மார்க்கசகாய செட்டியாரவர்கள் பதிப்பு. விலை, 0-12-0 கிடைக்குமிடம்:—முத்துக்குமாரசாமி செட்டியார், 216 லிங்க செட்டித்தெரு, சென்னை.

பலவித பயன்களாற் சிறந்த திருக்குறளின் இப்பதிப்பைக் கண்டோரெவரும் கொண்டாடுவர். பிழையற்ற அச்சும் சிற்றடக்கக் கட்டமைப்புமன்றி, நூற்றெண்பது பக்கங்கள் கொண்ட அகராதிகளின் (Index) உபயோகமும் இப்பதிப்பை திருக்குறளின் மற்றப் பதிப்புகளுக்கெல்லாம் முதலிடத்தில் வைக்குமென்பதற் கையமில்லை.

மூன்று பாலையும் அவைகளிலடங்கிய இயல்களையும் அவ்வியல்களுக்குரிய அதிகாரங்களையும் விளக்கிக் குறளின் அமைப்பைச் செவ்வனே காட்டும் கண்ணாடியொன்று சேர்க்கப்பட்டுளது.

இப்பதிப்பின் இறுதியிலிருக்கின்ற சொற்குறிப்பகராதியையும் ஒப்புக்குறள் அட்டவணையையும் ஆராயுங்கால், அவைகளைத் தொகுத்த இவ்வாசிரியரின் அறிவொடுமுதிர்ந்த தாளாண்மைகண்டு நாம் எய்தும் வியப்பும், அவைகளால் குறளுந் தமிழுங் கற்றார் கற்பார் இருதிறத்தோர்க்கும் புரியவல்ல உதவியின் பெருமையுஞ் சொல்லுந் தரமல்ல.

ஒரு சொல்லைத் திருவள்ளுவர் எப்பொருளில் அல்லது எத்தனை பொருளில் பயின்றுளார் என்று அறிவது அவசியமாயின் இச்சொற் குறிப்பகராதி அதனைச் சிறிதும் சிரமமின்றிக் காணுமாறு கண்முன் கொணர்ந்து காட்டும். ஒன்றினைப்பற்றி வள்ளுவர் யாது கொள்கை கொண்டுளார் என்று நினைத்தவளவில் உதிவைக்க ஒப்புக்குறள் அட்டவணையுளது.

இவைகளால் பெறும் பயனை ஒரு சிறு உதாரணத்தால் காட்டலாம் :—"செயற்கரிய செய்வார் பெரியர்" என்றார் வள்ளுவர். இவ்வாக்கியத்திற்கு இருவிதப் பொருள்கள் கொள்ளலாம். ஒன்று, "பெரியவர் சுலபமல்லாத கட்டமான காரியங்களைச் செய்துமுடிப்பார்." மற்றது, "எத்தனை முயன்றாலும் செய்து முடிப்பதற்கு இயலாத கருமங்களைக் கைக்கொள்பவரே பெரியர்" என்பது. இவ்விரண்டில் வள்ளுவர் கருத்து யாது என்று அறியவேண்டுமாயின், அரிது அருமை என்ற சொற்களைப்பற்றிச் சொற்குறிப்பு அகராதியின் உதவி கொண்டாராயுங் காலையில், 'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலைமாற்ற லரிது' என்னுங் குறள் எதிர்வந்து நின்று, 'இயலாமை' என்னும் பொருளில் அச்சொல் வழங்கப் பெற்றுளதைத் தோற்றுவிக்கும். இனி ஒப்புக்குறள் அட்டவணையில் நோக்குமிடத்து, "பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின் அருமை யுடைய செயல்", என்னுங்குறள் எதிர்தோன்றி ஆற்றுவதிலேயே — செய்வதிலேயே — பெருமையுள தென்பதைப் பலப்படுத்தும்.

இவ்விதமே, திருக்குறள் செய்யுள்களில் வந்துள ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு குறளின் கருத்தும் தொகுக்கப்பெற்றிருக்கின்றன வென்றால் இப்பதிப்பின் பெருமையும் பயனும்பற்றிப் பல கூறுவானேன். இதனாசிரியர்க்குத் தமிழுலகம் தீர்க்கவொண்ணாக் கடமைப்பட்டுளது.

உரைக்காக வேறெப் பதிப்பு வாங்குவாராலும் இப்பதிப்பொன்று ஒவ்வொருவர்கையிலும் இருக்கவேண்டுமென்று யாம்விழைகின்றோம். சான்றோர் உறவென பழகப்பழக இடையறு நலங்கள் இதனா லெய்துவர்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A., B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்ருர்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்".

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

இளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genius, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

pply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

இந்திய சட்டசபைத் தலைவரான ச. ப. படேல் ரங்கூனுக்குப் போயிருக்கிருர்.

***

சென்னைச் சுகுணவிலாஸசபையின் 37-வது. வருஷக் கொண்டாட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மிகவும் விமரிசையாக நடந்தது.

***

தென்னிந்திய புகையிரத வேலை நிறுத்தம் முடிவாய் விட்டது. சீக்கிரத்தில் வண்டிகள் ஒழுங்காய் ஓட ஆரம் பிக்குமென்று தெரிகிறது. இப்பவும் பகல் வண்டிகள் தான் ஓடுகின்றன.

***

நைஜாம் அரசர் கவி ரவீந்திரநாதருடைய விஸ்வ பாரதியில் இஸ்லாமியக் கல்விப் பயிற்சிக்காக போதகா சிரியர்களை ஏற்படுத்துவதன் பொருட்டு வேண்டிய பணம் அளித்திருக்கிறதாகத் தெரிகிறது.

***

அலகாபாத் புகையிரத ஸ்தானத்தில் மகேந்திர நாத சர்மா என்னும் ஓர் வைத்தியர் போலீசாரால் கைதி செய்யப்பட்டு, அவர் உடன்கொண்டு சென்ற பெட்டி யைச் சோதித்துப் பார்த்த பொழுது அதில் சிதையுண்ட சவம் ஒன்று காணப்பட்டது.

***

பம்பாய் நெசவுச் சாலை வேலை நிறுத்தம் முடிவுக்கு வரவில்லை. தொழிலாளர் இன்னும் இரண்டு மாத மானாலும் தங்கள் விருப்பங்களுக்கு முதலாளிகள் ஒத்து வராவிட்டால் வேலைக்குப் போவதில்லை என்று நிர் மானித்திருக்கிருர்கள். வீட்டுக்கு வீடு அரிசி பணம் தண்ட ஆரம்பித்திருக்கிருர்கள்.

***

அகில இந்திய புகையிரதத் தொழிலாளர் மகா நாடு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதியளவில் சென்னையில் நடக்க இருக்கிறது. இதில் தென்னிந்திய ரெயில்வேயில் வேலை, நிறுத்தம் மற்றும் இந்திய புகையிரதப் பாதை களில் வேலை செய்பவர்களுடைய குறைவுகள் எல்லா வற்றையும் ஆராய்ந்து அவைகளைத் தீர்ப்பதற்குத் தக்க வழி தேடுவார்கள்.

***

மைலாப்பூரில் ராமக்கிருஷ்ண மடத்துப் பள்ளிக் கூடத்துக் கருகாமையி லுள்ள குயப்பேட்டையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணி யளவில் அவ்விடமிருந்த ஓலைக் குடிசைகளில் நெருப்புப் பற்றி ஏறக்குறைய 15000 ரூபா நஷ்டமாய்ப் போனது. 900 பேருக்கு வசிக்க இடம் இல்லை. இந்த விபத்து ஒரு சிறு குடிசையில் முதல் நெருப்புப் பற்றி வெகு சீக்கிரத் தில் பரவியதால் உண்டானது. ராமக்கிருஷ்ண மடத்து மாணவர்கள் முன்னின்று நெருப்பை அவிப்பதற்கு மிக வும் உதவி செய்தார்கள். வீடற்றுப்போன இந்தச் சனங் களுக்கு மைலாப்பூரில் உள்ள சிலர் அன்று சாயங்காலம் உணவு கொடுத்தார்கள்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(8)

TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

189014

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)